# தீர்க்க ஆயுள், நல்ல ஆரோக்கியம், செல்வ வளம், தெய்வ பலம் அருளும்

# ஸ்ரீ அமிர்தம்

## என்று அழைக்கப்படும்

# ஸ்ரீ அமிர்த சிரஞ்சீவிநிகள்

*மனிதனின் வாழ்நாள் 100 வருடங்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு மனிதனுடைய ஆயுளும் ஆரோக்கியமும் அவனுடைய முற்பிறவிகளில் செய்த பாவ-புண்ணியங்கள், மற்றும் இந்த பிறவியில் இன்று வரை செய்த பாவ-புண்ணியங்களை பொறுத்தே அமையும் என்பது சாஸ்திரம்.*

*மனிதனுடைய வாழ்கையில் ஒவ்வொரு கால கட்டத்திலும் அவனுக்கு பலவிதமான இன்னல்கள் வரத்தான் செய்யும். இந்த இன்னல்கள் வராமல் இருப்பதற்காக சில பிராயச்சித்தங்கள் செய்து கொள்வது நல்லது என்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த இனனல்கள் மேற்கொண்டு வராமல் இருக்கவும், நம் சாஸ்திரத்தில் மேலும் சில பிராயச்சித்தங்கள் செய்து கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றன. இவைகளை தான்* **சாந்தி செய்து கொள்ளும் பிராயச்சித்தங்கள்** *என்று சொல்லப்படுவது.*

**முதல் சாந்தி பிரயோகம் :** *இதை* **ஆயுஷ்ய ஹோமம் அல்லது அப்த பூர்த்தி சாந்தி** *என்று சொல்லப்படுகிறது. ஒரு குழந்தை பிறந்த முதலாம் ஆண்டு முடிவிலும் இரண்டாம் ஆண்டு தொடக்கத்திலும், அதாவது, அந்த குழந்தையின் முதல் ஜன்ம நட்சத்திரத்தன்று செய்யப்படுவது. அந்த குழந்தையின் கரு உருவானதிலிருந்து, இந்த நாள் வரை ஏற்பட்ட தோஷங்களிலிருந்து விடுபடவும். அந்த குழந்தைக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும், எதிர் காலத்தில் நிறைந்த செல்வாக்குடன், எல்லா தெய்வத்தின் அனுக்கிரகமும் பெற வேண்டியும் செய்து கொள்வதே ஆகும்.*

**இரண்டாவது சாந்தி பிரயோகம் :** *இதை* **உக்ர ரத சாந்தி** *என்று சொல்லப்படுகிறது. இது மனிதனின் 59வது வயது முடிந்து 60வது வயது ஆரம்ப நாளான ஜன்ம நட்சத்திரத்தன்று செய்யப்படுகிறது. ஒருவன் 60 ஆண்டுகள் உயிர் வாழ்வது என்பது ஒருசிறந்த விஷயம். அப்படி 59 வயது முடிந்து 60வது வயது ஆரம்பிக்கும் பொழுது, சில பல இன்னல்களும் கஷ்டங்களும், நிச்சயமாக வந்து அவனுடைய ஆயுள், ஆரோக்கியத்தைக் குறைக்கும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த ஒரு வருடத்தில் வரும் இன்னல்களை தவிற்கும் பொருட்டே, இந்த சாந்தி பிரயோகம் செய்து கொள்ளப்படுவது.*

**மூன்றாவது சாந்தி பிரயோகம் :** *இதை* **சஷ்டி யப்த பூர்த்தி சாந்தி** *என்று சொல்லப்படுகிறது. இது மனிதனின் 60 வயது முடிந்து 61வது வயது ஆரம்பிக்கும் நாளான ஜன்ம நட்சத்திரத்தன்று செய்து கொள்வது. இதை ஆறுபதாம் கல்யாணம் என்றும் அழைக்கிறார்கள். அதாவது தமிழ் வருடங்கள் 60 ஆகும். அது ஒருமுறை முடிந்துவிட்டது என்று அர்த்தம். இந்த சமயத்தில் நமக்கு ஆயுள், ஆரோக்கியம், பாக்கியங்கள் கொடுத்த அனைத்து தெய்வங்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாகத்தான் இந்த நிகழ்ச்சி அமையும்.*

*இந்த தெய்வங்களைப் பற்றிய விபரங்கள் இந்த கட்டுரையில் அடுத்த பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.*

*பொதுவாக ஒருவருக்கு 60 ஆண்டுகள் முடிந்த பொழுது, சற்று ஆரோக்கிய குறைவு ஏற்படத்தான் செய்யும். மேலும் வாழ்க்கையில் அதாவது குடும்பத்திலும் சில பல பிரச்சனைகள் வரத்தான் செய்யும். இது பொதுவாக அனைவரின் வாழ்க்கையிலும் தவிர்க்க முடியாத விஷயமாகும். இந்த சமயத்தில் தான் நமக்கு ஆதரவும் உதவியும் தேவைபடும் காலம் ஆகும். இதை மனதில் கொண்டுதான், மேற்சொன்ன சாந்திகளை செய்து கொண்டால், ஒருவனுக்கு வரும் எதிர்காலத்தில் நல்ல ஆயுள் பலமும், ஆரோக்கியமும் மற்றும் அனைத்து தெய்வங்களின் கடாட்சமும், அவனுக்கு இந்த வயதில் கிடைக்க வேண்டிய சுப,சௌக்கிய,சௌகர்ய,சௌபாக்கியங்கள் தடையில்லாமல் கிடைக்கும். வாழ்க்கையில் துக்கங்கள் குறைந்து சுகமும், நிம்மதியும் கிடைக்கும்.*

*அதனால் தான் வாழ்நாளில் இந்த நிகழ்ச்சியை மிகவும் முக்கியமான நிகழ்ச்சி என்று சொல்லப்படுகிறது. மேலும்,60ஆவது கல்யாணம் செய்து கொள்வதே பாக்யம் என்றும் அனைவரும் சொல்வார்கள், அதனால் இந்த சாந்தி பிரயோகத்தை அனைவரும் செய்து கொண்டே ஆகவேண்டிய பிரயோகமாகும்.*

**மூன்றாவது சாந்தி பிரயோகம் :** இதை **பீம ரத சாந்தி** என்று சொல்லப்படுவது. இதை 69 வயது முடிந்து 70வது வயது ஆரம்பத்திலும் செய்து கொள்ளலாம். 70 வயது முடிந்து 71 வயது ஆரம்பத்திலும் செய்து கொள்ளலாம். 70 வயது என்பதும் ஒரு முக்கியமான கால கட்டம். இந்த வயதிற்கு பிறகும் எந்த வித கஷ்டங்கள் வராமல் இருக்க முக்கியமாக ஆயுள்விருத்திக்காகவும், ஆரோக்கிய விருத்திக்காகவும் செய்து கொள்ளப்படுவது.

**நான்காவது சாந்தி பிரயோகம் :** இதை **விஜய ரத சாந்தி** என்று சொல்லப்படுவது. இதை இரண்டு சமயங்களில் செய்து கொள்கிறார்கள். 75 வயது முடிந்து 76வது வயது ஆரம்பக்கும்பொழுது அல்லது 77 வயது 7 மாதம் 7 நாட்கள் (77-7-7) முடிந்த நாளில் செய்து கொள்கிறார்கள். இந்த சாந்தியும் மேற் சொன்ன பலன்களுக்காக செய்து கொள்ளப்படுகிறது.

**ஐந்தாவது சாந்தி பிரயோகம் :** இதை **சதாபிஷேகம்** என்று சொல்லப்படுவது. இதனை 80 வயது முடிந்து 81வது வயது ஆரம்பிக்கும் ஜன்ம நட்சத்திரத்தன்று செய்துக்கொள்வது. ஆயிரம் பிறை கண்டவர் என்று சதாபிஷேகம் ஆனவர்களை அழைப்பது. ஆயிரம் பிறைகளை காண 80 ஆண்டுகள் 6 மாதங்கள் ஆகும். அதனால் 80 ஆண்டுகளும் 6 மாதங்களும் ஆன பிறகு, ஒரு நல்ல நாளன்று இந்த வைபங்களை செய்து கொள்ளலாம். பொதுவாக இந்த நிகழ்ச்சியை தன் பிள்ளைகளாலும், பேரக்குழந்தைகளாலும், கொள்ளுப் பேரக் குழந்தைகளாலும், எள்ளுப் பேரக்குழந்தைகளாலும் செய்யப்படுகிறது. அதாவது தனக்கு பின்னால் வரும் சந்ததியினர்களால் செய்விக்கப்படுவது. தனக்கு பின் உள்ள 3 அல்லது 4 தலைமுறையினரால் செய்விக்கப்படுவது.

ஆயுள் ஆண்டவனால் நிர்ணயிக்கப்படுவது. இந்த ஆயுள் பாவம் தன்னுடைய அனைத்து சந்ததியினருக்கும் கிடைக்க வேண்டும் என்று சதாபிஷேகம் செய்து கொள்பவர்களை வணங்கினாலே நமக்கு ஆயுள் பலம் நீடிக்கும் என்பது தர்ம சாஸ்திரம், தர்ம சாஸ்திரப்படி முழுமையாக வேதம் கற்று முடித்தவரை. அவரை விட வயதில் பெரியவர்கள் கூட வணங்க வேண்டும். ஆனால் சதாபிஷேகம் செய்து கொண்டவர்களை, இந்த வேதத்தை முழுவதும் கற்றுணர்ந்தவர்கள் கூட வணங்க வேண்டும். அவ்வளவு முக்கியத்துவம் இந்த சதாபிஷேகத்திற்கு உண்டு.

**ஆறாவது சாந்தி பிரயோகம் :** இதை **பூர்ணாபிஷேகம்** என்றும் சொல்லப்படுவது. **கனகா அபிஷேகம்** என்றும் சொல்லலாம். இதை ஒருவர் 100 வயது முடிந்த 101 வது வயது ஆரம்பிக்கும் நாளில் அதாவது ஜன்மநட்சத்திரத்தன்று செய்துக்கொள்வது. நமது சாஸ்திரம் ஒருவருடைய பூர்ணமான ஆயுள் 100 என குறிப்பிடுகிறது. இது வாழ்க்கையில் கிடைக்கும் பெரும் பாக்கியமாகும். பூர்ணாபிஷேகம் செய்து கொண்டவர்களை பார்ப்பதே மிகவும் அரிதாகும்.
**அற்புதமான விஷயங்கள் :** மேற்கூறிய அனைத்து சாந்தி பிரயோகங்களிலும், அந்தந்த வயதில் வரும் இடர்பாடுகளையும். கஷ்டங்களையும் நிவர்த்தி செய்து கொள்வதற்காகவும், ஆயுள், ஆரோக்கியம் ஆகியவற்றை விருத்தி செய்து கொள்வதற்காகவும், இந்த வயதில் சௌகர்யமாகவும், மனநிம்மதியுடனும், சந்தியினருடனும் இருக்க வேண்டும் என்பதற்காக செய்துகொள்ளும் சடங்குகளாகும்.

இந்த சாந்தி பிரயோகங்களை முறைப்படி செய்துகொண்டால் பலன்களும் நிச்சயமாக கிடைக்கும்.

இந்த எல்லா சாந்தி பிரயோகங்களை கீழ்க்கண்ட தெய்வங்களை பூஜிப்பதே ஆகும்.

1. **ஸ்ரீ மகா கணபதி**
2. **ஸ்ரீ மகா லஷ்மி**
3. **ஸ்ரீ மகா விஷ்ணு**
4. **ஸ்ரீ வள்ளி**
5. **ஸ்ரீ சுப்ரமண்யர்**
6. **ஸ்ரீ தேவசேனா**
7. **ஸ்ரீ அசுவினி**
8. **ஸ்ரீ பரணி**
9. **ஸ்ரீ கிருத்திகை**
10. **ஸ்ரீ ரோகிணி**
11. **ஸ்ரீ மிருகசிரசம்**
12. **ஸ்ரீ திருவாதிரை**
13. **ஸ்ரீ புணர்பூசம்**
14. **ஸ்ரீ பூசம்**
15. **ஸ்ரீ ஆயில்யம்**
16. **ஸ்ரீ மகம்**
17. **ஸ்ரீ பூரம்**
18. **ஸ்ரீ உத்திரம்**
19. **ஸ்ரீ ஹஸ்தம்**

20. ஸ்ரீ சித்திரை
21. ஸ்ரீ சுவாதி
22. ஸ்ரீ விசாகம்
23. ஸ்ரீ அனுஷம்
24. ஸ்ரீ கேட்டை
25. ஸ்ரீ மூலம்
26. ஸ்ரீ பூராடம்
27. ஸ்ரீ உத்திராடம்
28. ஸ்ரீ திருவோணம்
29. ஸ்ரீ அவிட்டம்
30. ஸ்ரீ சதயம்
31. ஸ்ரீ பூரட்டாதி
32. ஸ்ரீ உத்திரட்டாதி
33. ஸ்ரீ ரேவதி
34. ஸ்ரீ வினாயகர்
35. ஸ்ரீ அமிர்த மருத்யெஞ்ஜயர்
36. ஸ்ரீ ஆயுஷ்ய தேவதை
37. ஸ்ரீ தந்வந்தரி

38. to 44. ஸ்ரீ சப்த சிரஞ்சீவிகள்
45. to 51. ஸ்ரீ சப்த நதிகள்
52. to 58. ஸ்ரீ சப்த ரிஷிகள்
59. to 118. ஸ்ரீ 60 வருஷ தேவதைகள்
119. to 120. ஸ்ரீ அயன தேவதைகள்
121. to 126. ஸ்ரீ ருது தேவதைகள்
127. to 138. ஸ்ரீ மாஸ தேவதைகள்
139. to 140. ஸ்ரீ பட்ச தேவதைகள்
141. to 147. ஸ்ரீ வார தேவதைகள்
148. to 174. ஸ்ரீ யோக தேவதைகள்
175. to 185. ஸ்ரீ கரண தேவதைகள்
186. to 201. ஸ்ரீ திதி தேவதைகள்
202 to 209. ஸ்ரீ அஷ்ட வசுக்கள்
210. to 220. ஸ்ரீ ஏகாதச ருத்ரர்கள்
221. to 229. ஸ்ரீ நவ துர்க்கா
230. to 241. ஸ்ரீ துவாதச ஆதித்யர்கள்
242. to 247. ஸ்ரீ சப்த மருத்யுக்கள்
248. to 259. ஸ்ரீ ராசி தேவதைகள்
260. to 264. ஸ்ரீ பஞ்ச பிரம்மாதிகள்
265. ஸ்ரீ பிரம்மா
266. ஸ்ரீ சரஸ்வதி
267. ஸ்ரீ மஹா லஷ்மி
268. ஸ்ரீ மஹா விஷ்ணு
269. ஸ்ரீ ருத்ரர்
270. ஸ்ரீ பார்வதி
271. ஸ்ரீ கௌரி
272,273. ஸ்ரீ க்ஷேத்ர பாலகர்,ஸ்ரீ அபயங்கரர்
274. ஸ்ரீ வாஸ்து பகவான்
275.to 284. ஸ்ரீ அஷ்டதிக் பாலகர்கள்
285. ஸ்ரீ அக்நி பகவான்
286. ஸ்ரீ அபிஜித்
287.to 293 ஸ்ரீ ஸப்த மாதாக்கள்
294. ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி
295.to 297. ஸ்ரீ பூர்ணா புஷ்களாம்பா சமேத
ஐயனாரப்பன்
298. ஸ்ரீ தெக்ஷ்ணாமூர்த்தி
299.to 307. ஸ்ரீ நவக்கிரகங்கள்
308. ஸ்ரீ கருடன்
309. ஸ்ரீ ஆஞ்சநேயர்

**இந்த அனைத்து தெய்வங்களையும், கும்பங்களில் ஆவாஹனம் செய்து. முறைப்படி பூஜைகள் செய்து,கீழ்க்கண்ட ஹோமங்களையும் செய்து இந்த ஹோமப்பலன்களை, மீண்டும் இந்த கும்பங்களில் சேர்த்து, ஆராதனை செய்து, இதிலுள்ள புனித தீர்த்தங்களை கர்த்தாவுக்கு அதாவது எஜமானனுக்கு சகஸ்ர தாரா என்று அழைக்கப்படும் ஜல்லடை வழியாக அபிஷேகம் செய்வித்தலே இந்த பிரயோகம் ஆகும்.**

| | **ஹோமத்தின் பெயர்கள்** | **பலன்கள்** |
|---|---|---|
| 1. | *ஸ்ரீ மகா கணபதி ஹோமம்* | *தடங்கல்கள், சங்கடங்கள், விக்னங்கள், ஆகியவற்றை போக்க வல்லது. ஸ்ரீ மகா கணபதி பகவானின் பரிபூர்ண கடாட்சம்.* |
| 2. | *ஸ்ரீ நவக்கிரக ஹோமம்* | *பீடா பரிகாரங்கள், எல்லா விதமான கிரக தோஷ நிவர்த்தி, பாப நிவர்த்தி.* |
| 3. | *ஸ்ரீ மகா லஷ்மி குபேர ஹோமம்* | *ஸ்ரீ மகா லஷ்மி கடாட்சம்,ஸ்ரீ குபேர கடாட்சம், சுப ஸௌக்கிய, ஸௌகரிய ஸௌபாக்யம் கிடைக்கும்.* |
| 4. | *ஸ்ரீ தந்வந்தரி ஹோமம்* | *ஆரோக்கிய விருத்தி* |
| 5. | *ஸ்ரீ ஆயுஷ்ய ஹோமம்* | *ஆயுள் விருத்தி* |
| 6. | *ஸ்ரீ நட்சத்திர ஹோமம்* | *நட்சத்திரஅதி தேவதைகளை பிரீதி செய்ய. இதனால் மனதில் நினைத்த காரியங்கள் நிறைவேறும்.* |
| 7. | *ஸ்ரீ வைஸ்வாநரக்னி* | *பிராயசித்த ஹோமம் இதனுடைய பலன்களை தனியாக கடைசியில் கொடுத்துள்ளோம்.* |

**(பிற்சேர்க்கை ஒன்று)**

*(மிகவும் முக்கியஎன்பதால் விரிவாகக் கொடுத்துள்ளோம்)*

| | | |
|---|---|---|
| 8. | *ஸ்ரீ அமிர்த மிருத்யெஞ்ஜய* | *ஹோமம் ஆயுள் விருத்தி ஆரோக்கிய விருத்திகிடைக்கும்.* |
| 9. | *ஸ்ரீ ஜயாதி ஹோமம்* | *இந்த மேற்சொன்ன ஹோமங்ளினால் ஏற்படும் எல்லா பலன்களையும் செழிப்படைய செய்ய உதவுவது. மேலும் குடும்பத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும். முக்கியமாக தம்பதியர்களிடம் அந்நோன்னியத்தை பலப்படுத்தும்.* |

*மேற்சொன்ன தெய்வங்களின் பெயர்களையும், ஹோமங்களையும் பார்த்தாலே நமக்கு என்னென்ன பலன்கள் கிடைக்கும் என்று தெரியும்.*

*மேற்சொன்ன சாந்தி பிரயோகங்கள், அந்தந்த வயதில் அந்தந்த நாளில் செய்து கொள்வது நல்லது. அப்படி முடியாமல் போகும்படியானால் அதாவது கௌகர்யப்படவில்லை என்றால் அடுத்து வரும் வருடங்களில் ஜன்ம நட்சத்திரத்தன்று செய்து கொள்ளலாம் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.*

**முக்கியமானதும், அதி அற்புதமான விஷயம் :** *மேற்சொன்ன இந்த அனைத்து சாந்தி பிரயோகங்களிலும், மேற்சொன்ன 309 தெய்வங்களையும் நாம் ஆராதிக்கின்றோம்.இவைகள் அனைத்துமே எந்த திருக்கோயிலிலும் ஒருசேர இல்லை. மேலும், மேற்சொன்ன தெய்வங்களில் 200 தெய்வங்களின் உருவங்கள் அதாவது விக்ரஹங்கள் எந்த கோவிலிலும் இல்லை. இவற்றிற்கெல்லாம், பூஜைகள் மந்திர பூர்வமாகதான் இருக்கிறது. நாம் தான் முதன்முதலில் இவைகளை விக்ரஹங்களாக வடிக்கிறோம். இது நமக்கு கிடைத்த பெரிய பாக்கியம்.*

*உதாரணமாக, நாம் ஒருவரை நேரிலோ அல்லது போட்டோ மூலமாகவோ பார்க்காதவரை அவர் எப்படியிருப்பார் என நினைக்க முடியாது. ஆனால் நாம் அவரை ஒருமுறை பார்த்துவிட்டால், இவர் இப்படித்தான் இருப்பார் என்று நமது நினைவில் நிற்கும். இந்த உதாரணம் போல், நாம் ஆராதனை செய்யும் தெய்வங்களை அனைவருக்கும் காண்பிக்க வேண்டும் என ஆவல் ஏற்பட்டு, இந்த ஸ்ரீ அமிர்த சிரஞ்சீவிநிகள் திருக்கோயிலில் இவைகளை கல் விக்ரஹங்களாக வடித்து ஆவாஹனம் செய்யும் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.*

**மேலும் சில முக்கியமான விஷயங்கள் :**

**மேற்சொன்ன அனைத்து பிராயசித்த பூஜைகளாலும், ஹோமங்களாலும், மனிதனுக்கு அந்தந்த வயதில் மேற்சொன்ன சாந்திகள் செய்துகொள்ளும்போது, முக்கியமாக தீர்க்க ஆயுளும், நல்ல ஆரோக்கியமும், தெய்வ கடாட்சமும் கிடைக்கும், அதே சமயம், இந்த சாந்தி பிரயோகத்தால், நமக்கு மேலும் பல என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்றும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். நாம் இந்த சாந்தி பிரயோகங்களால் மேலே குறிப்பிட்ட 309 தெய்வங்களை ஆராதனை செய்கிறோம். இந்த அனைத்து தெய்வங்களும் என்னென்ன பலன்கள் கொடுக்கும் என்பதை விரிவாக பார்ப்போம்.**

**ஸ்ரீ மகா கணபதி :** *இந்த சாந்தி பிரயோகம் நன்றாகவும் எந்தவிதமான விக்னங்களும், தடங்கல்களும், சங்கடங்களும் இல்லாமல் நடக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொள்கிறோம். விநாயகரை முதன்முதலில் வணங்கி விட்டு இந்த பிரயோகங்களை செய்தால் எல்லாம் நல்லபடியாக முடியும்.*

**ஸ்ரீ மகா லக்ஷ்மி, ஸ்ரீ மகா விஷ்ணு :** *உலகத்தில் தர்மத்தை ரட்ஷணம் செய்பவர் ஸ்ரீ மகாவிஷ்ணு. நமக்கு எல்லா விதத்திலும் பாதுகாவலனாகவும், எல்லாவிதமான பாக்கியங்களையும் அருளும் வரப்பிரசாதியாகவும் இருப்பவர். இவரை நாம் சரணடைந்தால் நமக்கு வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துமே, எப்பொழுதுமே நிச்சயமாக கிடைக்கும்.*

*ஸ்ரீ மகா லக்ஷ்மி நமக்கு வேண்டிய பணம், பொருள், செல்வம், வீடு, மனை, வாகனங்கள், பால்பாக்கியம், சுப சௌக்கிய, சௌகர்யம், சௌபாக்கியம், நிம்மதி, சந்தோஷம், தீர்க்க ஆயுள், ஆரோக்கியம், பட்டு வஸ்த்திரங்கள், நகைகள், அனைத்துமே கொடுப்பவள். இந்த இரண்டு தெய்வங்களையும், இத் திருக்கோயிலில் பிரதான தெய்வங்களாக அமைந்துள்ளோம்.*

**ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமண்யர் :** *மந்திர சாஸ்திரங்களுக்கு முக்கியமானவர். ஞானத்தையும் அனைத்து வெற்றிகளையும் தருபவர். அசாத்திய காரியங்களை செய்யவும். தைரியமாக பேசவும், தைரியமாக செயல்படவும், வீரியத்தையும் கொடுப்பவர். தன்னம்பிக்கையை வளர்ப்பவர். மந்திர சக்தியில் ஜீவனாக உள்ளவர். இவரது உபாசனையால், எல்லா விஷயங்களையும் சாதிக்கும் வல்லமை பெறலாம்.*

**ஸ்ரீ நட்சத்திர அதிதேவதைகள் :** *இந்த புத்தகத்தில் பிற்பகுதியில் ஸ்ரீ நட்சத்திர அதி தேவதைகளைப் பற்றி மிகவும் விரிவாக 32 பக்கங்களில் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பார்க்கவும்.* **CLICK HERE**

**ஸ்ரீ அமிர்த மிருத்யெஞ்ஜயர் :** *இவர் சாட்சாத் சிவபெருமான். ஸ்ரீ அமிர்தம் என்றால் உயிர்காக்கும் மருந்து என்றும், இதனை உண்டால் மரணமே இல்லையென்றும் அனைவருக்கும் தெரிந்த விஷயம். திருப்பாற்கடலை கடைந்த பொழுது கிடைத்த பிரசாதம்தான் அமிர்தம். இதனை அருந்திய தேவர்கள் அனைவருக்கும் மரணமே இல்லை மிரத்யெஞ்ஜயர் உயிர்காக்கும் அமிர்தம் கிடைக்க உதவுவார். இதன் மூலம் என்றும் தீர்க்க ஆயுள் பலத்தையும், ஆரோக்கியத்தையும் பெறலாம் என்று அர்த்தம். இந்த சாந்தி பிரயோகங்களில் இவர்தான் பிரதானமான தெய்வம்.*

*மனிதர்கள் அனைவருக்கும் ஒருநாள் மரணம் உண்டு என்பது அனைவருக்கும் தெரியும். இவரது அருட்கடாட்சத்தால் நமக்கு நீண்ட ஆயுளும், நல்ல ஆரோக்கியமும் கிடைக்கும். மேலும், நம்முடைய உயிர் உடலை விட்டு பிரியும்பொழுது நம்முடைய ஆத்மாவிற்கும், உடலுக்கும், எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் காப்பாற்றுவார். மிருத்யெஞ்ஜய மந்திரத்தின் அர்த்தமும் இதுவே. வெள்ளரிக்காய் நன்றாக பழுத்ததும், அதனுடைய காம்பு, அந்த செடியிலிருந்து எப்படி சுலபமாக விடுபடுகிறதோ, அப்படியே நம்முடைய ஆத்மாவும் மரணகாலத்தில், நம்முடைய உடலிலிருந்து அவஸ்தையின்றி பிரிய வேண்டும் என்று பிரார்த்திப்பதே இதன் அர்த்தம்.*

**ஆயுஷ்ய தேவதை :** *அனைவருக்கும் ஆயுள் பலம் தேவை. இந்த ஆயுள் பலத்தை நிர்ணயம் செய்பவர் இவர்தான். இந்த ஆயுள் பலத்தை நாம் சென்ற ஜன்மங்களிலும், செய்த பாவ - புண்ணியங்களைப் பொறுத்தே நிர்ணயம் செய்வார். இந்தப் பிறவியில் இன்றுவரை நாம் செய்த பாவ - புண்ணியங்களைப் பொறுத்து நம்முடைய ஆயுள் பலம் கூடும் அல்லது குறையும். இதனை நிர்ணயம் செய்பவர் இவர்தான். இதனால், இவரை பிரீதி செய்தால் நம்முடைய ஆயுள்பலம் கூடும்.*

**ஸ்ரீ தந்வந்திரி பகவான் :** *முன்னோரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலை கடைந்தனர். அப்பொழுது முதலில் ஆலகால விஷம் வந்தது. அதை ஸ்ரீ மகா தேவர் உண்டு நீலகண்டம் என்ற பெயரைப்பெற்று அந்த விஷத்திலிருந்து உலகத்தை காப்பாற்றினார். பிறகு உச்சைஸ்வரம் என்ற*

*குதிரை, ஐராவதம் என்ற யானை, கௌஸ்துப மணி, கற்பக விருட்ஷம், காமதேனு, தேவ கன்னிகைகள், வாருணி, மகாலக்ஷ்மி தோன்றினார்கள். பின் அகன்ற மார்புடன் மஞ்சள் ஆடை தரித்து ஆபரண அலங்காரங்களோடு அமிர்த கலசத்தை கையில் ஏந்திக்கொண்டு ஸ்ரீ மகா விஷ்ணுவே ஸ்ரீ தந்வந்திரியாக அவதரித்தார்.*

*மனிதர்கள் அனைவருக்கும் ஆரோக்கியம் முக்கியம். இந்த ஆரோக்கியத்தை தரவல்லது இந்த அமிர்தம். நாம் தந்வந்திரி பகவானை ஆராதித்தாலேயே நமக்கு ஆரோக்கிய பலம் நிச்சயம் கிடைக்கும்.*

**சப்த சிரஞ்சீவிகள் :** *அனுமார், விபீஷணர், மகாபலி சக்கரவர்த்தி, மார்கண்டேயர், வியாசர், பரசுராமர் மற்றும் அசுவத்தாமர் ஆகிய ஏழுபேரும் இந்த உலகில் நித்திய சிரஞ்சீவிகளாக உள்ளனர். அப்படிபட்ட விசேஷமான வரத்தை பெற்றவர்கள். அதாவது, என்றும் நிலைத்திருக்கும் தன்மையைப் பெற்றவர்கள். இவர்கள் முதலில் வணங்கினால் நமக்கும் ஆயுள் பலமும், ஆரோக்கிய பலமும் கூடும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. மேலும் இவர்கள் எப்படி இந்த சிரஞ்சீவித் தன்மைகளை பெற்றார்கள் என்றும் தெரிந்துக்கொள்வோம். அனுமாருக்கு அவரது சுயநலமற்ற சேவை காரணமாகவும். விபீஷணருக்கு உறவின்றும் பாராமல் நியாயத்தின் பக்கம் நின்றதற்காகவும், மகாபலி சக்கரவர்த்தி இறைவனுக்கு தனது உயிரையே அர்ப்பணித்து தானம் செய்ததாலும், மாக்கண்டேயர் இறைவன் மீது கொண்ட உண்மை பக்தியின் காரணமாக எமனையே வென்றதாலும், வியாசர் மகாபாரதம் என்னும் அழியா காவியத்தை எழுதி, அதனை படிப்போரின் பாவங்களை போக்கி அருள் செய்ததாலும், பரசுராமர் கொண்ட கடமையிலிருந்து விலகாமல் தாயையே கொன்றதாலும், துரோணரின் மகன் அசுவத்தாமர் கடைசிவரை கட்சி மாறாமல் கவுரவர்களுக்கு தனது வீரத்தை காட்டியதாலும் சிரஞ்சீவிநிகள் என்னும் நிலையை பெற்று இன்றும், என்றும் வாழ்கின்றனர்.*

*மேற்சொன்ன விஷயங்கள் நமக்கு என்ன உணர்த்துகின்றது என்றால் எப்படி இருந்தால் நாம் நீண்டகாலம் வாழ தகுதி கிடைக்கும் என்று தெரிந்துக்கொள்ளலாம். பொதுவாக இந்த சாந்திகள் 59க்கு பிறகு செய்து கொள்ளும் பிரயோகங்களாகும். இந்த வயதிற்கு பிறகாவது, நாம் கண்டிப்பாக பின்பற்றலாமே என்கின்ற எண்ணம் இந்த கர்த்தாக்களுக்கும், எஜமான்களுக்கும் இந்த விழாக்களில் கலந்து கொள்பவர்களுக்கும் வரவேண்டும் என்று உணர்த்தும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன்.*

**சப்த நதிகள் :** *இந்தியாவில் 7 முக்கிய புண்ணிய நதிகள் உள்ளன. அவை: கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதா, சிந்து, காவேரி ஆகும். இந்த புண்ணிய நதிகளில் குளித்தால், நாம் தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாவங்கள், நமக்கு தெரிந்தோ, தெரியாமலோ சேர்ந்த சாபங்கள், தோஷங்கள், மேலும் நமக்கு தெரிந்தோ, தெரியாமலோ சேர்ந்த பிதுர் சாபங்கள் ஏதாவது இருந்தால், இவைகள் அனைத்தும் தீரும்ள. மேலும், புண்ணிய பலன்கள் கூடும். இந்த பலன்கள் இந்த நதி தீர்த்தங்களை அருந்தினாலும் கிடைக்கும். இவ்வளவு விசேஷமான புண்ணிய நதி தேவதைகளை இங்கு ஆவாஹனம் செய்து பூஜைகள் செய்யும் போது மேற்சொன்ன எல்லா பலன்களும் நமக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.*

**சப்த ரிஷிகள் :** *அகத்திய மகரிஷி, காஸ்யப மகரிஷி, அத்ரி மகரிஷி, பரத்வாஜ மகரிஷி, வியாச மகரிஷி, கௌத மகரிஷி, வசிஷ்ட மகரிஷி ஆகிய 7 ஆதாவது சப்த ரிஷிகள், இந்து மதத்தில் வேத வித்துக்களே இவர்கள்தான். இவர்கள் இந்து மதத்தின் ஆணிவேர்கள் தீர்க்க தரிசிகள், அனைத்து யோகங்களையும், அனைத்து சக்திகளையும் பெற்றவர்கள். எல்லாவிதமான அமானுஷ்ய சக்திகளையும் பெற்றவர்கள். இந்த சாந்தி பிரயோகத்தில் இவர்கள் அனைவரையும் பிரீதி செய்கின்றோம். இவர்களுடைய அநுக்கிரஹம் நம்முடைய வாழ்க்கையில் பலவிதமான அனுகூலங்களை ஏற்படுத்தும்.*

**60 வருஷ தேவதைகள் :** *இந்த அனைத்து சாந்தி பிரயோகங்களிலும் இந்த 60 வருஷ தேவதைகளை ஆராதிக்கின்றோம். இந்து சாஸ்திரப்படி 60 வருஷங்கள் என்பது ஒரு சுற்று ஆகும். இந்த ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு அதிதேவதை உண்டு. ஒவ்வொரு அதிதேவதையும் சில விசேஷமான பலன்கள் தரும். பொதுவாக மனிதனுக்கு முழு ஆயுள் பலம் என்பது 100 வருடங்கள், ஆனால் அவன் 60 வருடங்கள் பூர்த்தி செய்தாலே,ஒரு விசேஷம் தான். (இதைத்தான் ஆங்கில முறையில் தேர்வில் 60% வாங்கினால் முதல் வகுப்பு என்று வைத்தார்கள் போலும்) 60 வருடங்களை பூர்த்தி செய்ததினால் இந்த 60 வருட தேவதைகளுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். 61 வது வருடத்தில் இருந்து, இந்த வருடங்கள்* Repeat *ஆகும்.*

ஒரு மனிதனுக்கு 60 வயதிற்கு பிறகு ஆரோக்கியம் குறையத்தான் செய்யும். இந்த தெய்வங்களை நாம் வணங்கினால், அந்தந்த வருட தேவதை அந்தந்த வருடத்தில் நமக்கு ஆயுள் பலத்தையும் ஆரோக்கிய பலத்தையும் கொடுப்பார்கள். அதனால்தான் இந்த சாந்தி பிரயோகங்களில் இந்த 60 வருட தேவதைகளையும் ஆராதிக்கின்றோம்.

**அயனதேவதைகள் :** உத்ராயன தேவதை, தெக்ஷிணாயன தேவதை என இரண்டு தேவதைகள் உண்டு. உத்திராயனம் என்பது தை மாதம் ஒன்றாம் தேதி முதல் ஆனிமாதம் முடியவும், தெக்ஷிணாயனம் என்பது ஆடி மாதம் 1ம் தேதி முதல் மார்கழி மாதம் முடியவும் உள்ள காலங்கள்.

நமக்கு இந்த எல்லா காலங்களிலும் நன்மைகள் கிடைக்க, இந்த இரண்டு தேவதைகளையும் ஆராதிக்கின்றோம்.

**ருது தேவதைகள் :** ருது தேவதைகள் ஆறு உள்ளன. அவை : வசந்த ருது, கிரீஷ்ம ருது, வர்ஷ ருது, ஷரத் ருது, ஹேமந்த ருது, சசி ருது ஆகும். ருதுக்கள் என்பது பருவ காலங்கள் ஆகும். ஒவ்வொரு பருவகாலத்திலும் சீதோஷ்ன நிலை மாறும். நமது ஆரோக்கியமும், அந்தந்த காலங்களின் சீதோஷ்ன நிலைப்படி மாறும். நமது ஆரோக்கியமும், அந்தந்த காலங்களின் சீதோஷ்ன நிலைப்படி மாறும். நாம் அந்தந்த பருவகாலத்திற்கு ஏற்றாற்போல உடைகள், உணவுப் பழக்கங்கள் மற்றும் எல்லா அன்றாட வேலைகளையும் மாற்றி அமைத்துக்கொள்கிறோம். இப்படி நம்முடைய ஆரோக்கியத்தை எல்லா பருவகாலங்களிலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இந்த அனுக்கிரஹத்தை இந்த தேவதைகள் கொடுக்கிறார்கள்.

உதாரணமாக, மழைக்காலங்களில் நாம் எப்படி எப்படி இருக்கவேண்டும் என்பது நமக்குத் தெரியும். அதேப்போல் பனிக்காலங்களிலும், கத்திரி வெயிலிலும் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்பதும் தெரியும். இந்த அனைத்து ருது தேவதைகளை நாம் வணங்கினால், இந்த எல்லா பருவகாலத்திலும் அவர்களுடைய அனுக்கிரகங்களால் நமது ஆரோக்கியம் பாதிக்கப்படாமல் இருக்கும்.

**மாஸ தேவதைகள் :** மாஸ தேவதைகள் 12 ஆகும்.சூரியன் ஒரு மாதத்திற்கு ஒரு ராசி மாறும். ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு தனிப்பட்ட பலன்களை கொடுப்பார். இந்த பலன்கள் ஒவ்வொரு ராசியிலும் இருக்கும் பொழுதும் அவர் அவர்கள் நட்சத்திரத்தின் படியும், ராசியின் படியும் மாறும், இப்படி மாறும் போது எல்லா மாதங்களிலும், அதாவது சூரியன் எந்த ராசியில் இருந்தாலும் நமக்கு நல்ல ஆரோக்கியம் நிச்சயமாக கிடைக்க வேண்டும் என்று இந்த ராசி தேவதைகளை நாம் வணங்குகின்றோம்.

சூரியனும் அந்தந்த ராசி தேவதைகளின் அனுமதியுடன்தான் நல்லது கெட்டது செய்ய இயலும். அதனால் இந்த தேவதைகளின் அருள் நமக்கு இருந்தால், நமக்கு எல்லா மாதங்களிலும் நல்ல ஆரோக்கியம் நிச்சயமாக கிடைக்கும்.

**பட்ச தேவதைகள் :** இரண்டு பட்சங்கள் உண்டு. இந்த பட்சங்கள் சந்திரனை வைத்து கணக்கெடுக்கப்படுபவை. சந்திரனை மதி என்பர். மனோகாரகன் என்றும் அழைப்பர். சந்திரன் வளர்பிறையில் சுப கிரகமாகவும், தேய்பிறையில் அசுபகிரகமாகவும் பலன் தருவார். எல்லோருக்கும் சந்திர பலம், அதாவது மனோ பலம் தேவை. இந்த பட்ச தேவதைகளை வணங்கினால், நம்முடைய மனம் அதாவது மதி ஒன்றுபோல் இரண்டு பட்சத்திலும் இருந்து நமக்கு ஞானம், புத்திசாலித்தனம், படிப்பு, அறிவுக்கூர்மை, ஞாபக சக்தி, Decision Making Power என்ற அனைத்தும் எப்போழுதும் கொடுக்கும்.

**திதி தேவதைகள் :** திதி தேவதைகள் 16 ஆகும். பித்ருக்களுக்கு முக்கியமான அம்ச தேவதைகள். நம்முடைய இறந்த முன்னோர்கள் அனைவரும் பித்ருக்கள் என அழைக்கப்படுவார்கள். மனிதன் உயிருடன் இருக்கும்வரை அவனது பிறந்த நாளை நட்சத்திரம் கொண்டுதான் கணக்கிடப்படுகிறது. பூஜைகளுக்கும், ஹோமங்களுக்கும் சங்கல்பத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. மனிதன் இறந்த பிறகு, வருடா வருடம் வரும் அவன் இறந்த நாளை அவன் இறந்த திதியை அனுசரித்துத்தான் பித்ரு பூஜனம் செய்யப்படுகிறது. இதனைத்தான் திதி என்றும், திவசம் என்றும், ஸ்ரார்த்தம் என்றும், சொல்லப்படுவது. பொதுவாக பித்ரு பூஜைகள் மிகவும் முக்கியம். பித்ரு பூஜைகள் முறையாக செய்து கொண்டு வந்தால், ஒரு குடும்பத்திற்கு கோத்திர விருத்தி, குல விருத்தி, குடும்ப விருத்தி, புத்திர விருத்தி, வம்ச விருத்தி என்று சொல்லப்படும் அனைத்து முன்னேற்றங்களும் கிடைக்கும்.

பித்ரு பூஜனத்தை பித்ருக்கடன் என்றும் சொல்லப்படுவது. பித்ரு பூஜனம் சரியாக செய்து வந்தால், நமக்கு எல்லா தெய்வங்களின் அனுக்கிரகமும் கிடைக்கும் என்பது சாஸ்திரம். இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். அதனால், இந்த பித்ரு தேவதைகளை ஆராதனை செய்து வந்தால், அதாவது திருப்தி படுத்தி கொண்டு வந்தால், நமது குடும்ப சுபீட்ஷத்திற்கு குறை ஏற்படாது. மேலும், நாம் அறிந்தும், அறியாமலும் உள்ள நம்முடைய அனைத்து பித்ருக்களையும் திருப்தி அடைய செய்த புண்ணியம் கிடைக்கும். அதனால், நமக்கு அனைத்து பித்ருக்கள் ஆசீர்வாதம் கிடைக்கும்.

இந்த பித்ரு பூஜனம், சரியாக செய்து கொண்டு வராவிட்டால், குடும்பத்தில், சுபீட்க்ஷ குறை ஏற்படும், வம்ச விருத்தி தடைபடும். ஆரோக்கியங்கள் குறையும். பல காரணங்களால் பித்ரு பூஜைகளை அனைவராலும் சரியாக செய்யப்பட முடிவதில்லை. அதனால் இந்த திதி தேவதைகளை பூஜித்தாலே பித்ரு தோஷங்கள் நீங்கும். பித்ரு தோஷங்கள் நீங்கினால் தான் குடும்ப சுபிட்ஷம் கிடைக்கும். அதனால் தான் இந்த திதி தேவதைகளை ப்ரீதி செய்கின்றோம்.

**வார தேவதைகள் :** வார தேவதைகள் 7 ஆகும். அதாவது ஏழு கிழமைகளை குறிக்கும். இந்த எல்லா நாட்களிலும் நமக்கு சாதகமான நல்ல பலன்கள் கிடைக்க வேண்டும் என்று இந்த தேவதைகளை ஆராதிக்கின்றோம்.

**ஆஷ்டவசுக்கள் :** வசுக்கள் 8 தேவதைகள் ஆவார்கள் 1).திருவாஸ வசு, 2).அத்ர வசு,3),சோம வரு, 4).அப்யோ வசு, 5).அனிலாய வசு, 6).அனலாய வசு, 7).பிரத்யுஷ வசு, 8).ப்ரயாஸ வசு, தாய், தந்தை, குரு, குருக்கு சமமானவர்கள், பெரியோர்கள், இவர்களுடைய, ஆசீர்வாத பலம், மிகவும் முக்கியம். நமக்கு கிடைக்கும் இந்த ஆசீர்வாத பலங்களை இந்த வசுக்கள் அபிவிருத்தி செய்து கொடுப்பார்கள். ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் செய்வோம் என்பது பழமொழியல்ல, ஆயிரம் பேரிடம் சொல்லி கல்யாணம் செய்வோம் என்பதுதான் பழமொழி. ஆயிரம் பேருடைய ஆசீர்வாத பலம், கல்யாணத்திற்கு தேவையென்பதால், இந்த பழமொழி ஏற்பட்டது. இதிலிருந்து ஆசீர்வாதம் பலம் எவ்வளவு முக்கியம் என்பது தெரியும்.

**ஏகாதச ருத்ரர்கள் :** ருத்ரர்கள் 11 அம்சங்கள் பெற்றவர்கள். ஒவ்வொரு அம்சமும் ஒரு விசேஷமான பலனை கொடுக்கும். பூஜைகளில் விசேஷமானது அதிருத்ரம் என்று அழைக்கப்படுவது. இந்த வைபவத்தை நடத்த 121 ஆச்சாரியார்கள் 11 நாட்கள் தினமும் 11 முறை ருத்ரம்-சமகம் ஜபத்தையும் செய்தும். இந்த 11 நாட்களும் தினமும் ஒரு ஆவர்த்தி ஹோமமும் செய்வார்கள். இதில் சிவபெருமான் மிகவும் சந்தோஷம் அடைகிறார் என்பது சாஸ்திரம். சிவ பூஜையில் பிரதானமாக நடக்கும் பூஜைகளில் இதுவும் ஒன்று. ருத்ர பாடமும், சமக பாடமும் சேர்ந்து ஒரு பாராயணமாகும். இதில் ருத்ரம் 11 அநுவாகங்களைக் கொண்டது. இவை ருத்ரனை ஆராதிக்கும் மந்திரங்கள். சமகத்தில் 11 அநுவாகங்கள் உள்ளன. இதில் மனிதனுக்கு என்னென்ன வேண்டுமோ அவையெல்லாம் ருத்திரனை கேட்கும்படியாக இருக்கும். அதுவும் எப்படியென்றால் ருத்திரனை ஆராதிக்கும் எனக்கு இந்த பாக்கியங்கள் எல்லாம் சித்திக்கின்றன் என இருக்கும். இந்த பாராயணங்களை தினமும் செய்து வந்தால், இந்த பலன்களை, சிவபெருமான் நமக்கு நிச்சயமாக கொடுப்பார் என்பது ஐதீகம். மேலும், பல விஷயங்களை ஸ்ரீ அமிர்த மிருத்யெஞ்ஜயர் என்ற பகுதியில் பார்த்தோம்.

**யோக தேவதைகள் மற்றும் கரண தேவதைகள் :** நட்சத்திரங்களின் ஒரு அங்கமே யோகம். திதியின் ஒரு அங்கமே கரணம். நட்சத்திரங்கள் மற்றும் நட்சத்திர அதிதேவதைகள் பற்றியும், திதி தேவதைகள் பற்றியும் முன்பே பார்த்தோம். யோக தேவதைகள் 27, கர்ண தேவதைகள் 11, நட்சத்திர அதிதேவதைகளையும், திதி தேவதைகளையும் ப்ரீதி செய்வது போல இந்த யோக தேவதைகளையும் ப்ரீதி செய்ய வேண்டும். இந்த ப்ரீதிகள் இந்த சாந்தி பியோகத்ளதில் மட்டும்தான் சேர்க்கப்பட்டுள்ளது. வேறு எந்த பூஜைகளிலும் சேர்க்கப்படுவதில்லை.

முன்பு சொன்னது போல, ஆயுள் பலம் ஆண்டவனால் நிர்ணயிக்கப்படுகிறது.இருந்தாலும் இந்த அனைத்து தேவதைகளின் ஒட்டு மொத்தமாக ஆராதனை செய்து வந்தால் ஆயுள் பலம் கூடும். அதனால்தான இந்த அனைத்து தெய்வங்களையும் ஆராதனை செய்கின்றோம். உதாரணமாக, உடலில் எத்தனையோ நரம்புகள் உள்ளன. அனைத்து நரம்புகளும் நன்றாக வேலை செய்தால்தான் ஆரோக்கியம் நன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

**நவ துர்கா :** எல்லா மனிதர்களுக்கும் சத்ரு பயம் என்பது உண்டு. சத்ருகள் மூலம் வரும் உபாதைகளை நாம் தடுத்துக்கொள்ளவேண்டும். இந்த உபாதைகள் நமது வாழ்க்கையில் ஏற்படும் முன்னேற்றங்களை குறைக்கும். அல்லது கெடுத்து விடும். நம்முடைய சத்ருக்களிடமிருந்து நம்மை காப்பாற்றுபவள்

துர்காதேவி. இவள் ராஜ ராஜேஸ்வரியின் அம்சம். இந்த துர்க்கை அம்சத்தில் 9 அம்சங்கள் உண்டு. இவை நவ துர்கா என்று சொல்லபடும். எதிரிகள் பலவிதம், பல ரூபங்களில் வருவார்கள். பலவித சக்திகளை பெற்றவர்கள். ஒவ்வொருவரையும் அவர்களது வழியில் சென்றுதான் நாம் ஜெயம் காணவேண்டும். ஒவ்வொரு வகையான பகையை வெல்ல, துர்கா தேவி 9 விதமான தெய்வாம்சங்களுடன் தோன்றினாள். இந்த அனைத்து துர்க்கைகளின் அனுக்கிரகங்கள் நமக்கு இருந்தால்தான், நாம் எந்தவிதமான எதிரிகளையும், வெல்லலாம். நாம் நம்மை எல்லா விதத்திலும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் முக்கியம். பொதுவாக Preventive Maintenance, Breakdown Maintenance - யைவிட நல்லது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். நாம் முதலிலேயே அல்லது அடிப்படையிலேயே இந்த அம்சங்களின் அனுக்கிரகங்களைப் பெற்றுவிட்டால், முன்னேற்றத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் இருக்காது. அதனால்தான் இந்த சாந்தி பிரயோகங்களில் இந்த நவதுர்க்கைகளை ஆராதிக்கின்றோம்.

பொதுவாக அனைவருக்கும் தெரிந்த விஷயம் என்னவென்றால், கால்வலிக்கு தனி மருந்து, வயிற்று வலிக்கு தனி மருந்து, தலை வலிக்கு தனி மருந்து, இப்படி எல்லா வலிக்கும் தனித்தனி மருந்து தானே தவிர,சர்வரோக நிவாரணி என்று எல்லா வலிகளுக்கும் ஒரே மருந்து என்ற ஒன்று இல்லை. அதுபோல் இந்த ஒன்பது நவ துர்கைகளையும் நாம் ஆராதித்து வந்தால், நாம் எந்தவிதமான சத்ரு பயமே வாழ்க்கையில் இல்லாமல், படிப்படியாக நாம் முன்னேறலாம்.

**துவாதச ஆதித்தியர்கள் :** ஆதித்தியர்கள் என்றால் சூரிய பகவான். சூரிய பகவான் நமக்கு ஆத்ம பலத்தையும் சரீர பலத்தையும் கொடுக்கிறார். கண் சம்மந்தமான நோய்களை கொடுக்கவும், கட்டுபடுத்தவும் கூடியவர். அப்பா, அப்பா சம்மந்தபட்ட சொத்துக்கள் மற்றும் பிதுரார்ஜித சொத்துக்கள் அனைத்தையும் நமக்கு கொண்டு வந்து சேர்ப்பவர். நமக்கு தன்னம்பிக்கை என்ற பெரிய பாக்கியத்தைக் கொடுப்பவர். அரசாங்க பதவியில் உள்ளவர்கள் சூரிய பலம் அதிகமாக பெற்றிருப்பார்கள். இப்படிப்பட்ட ஆதித்தியர்கள் 12 பேர் உள்ளனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான விசேஷப்பலன்களைப் பெற்றவர்கள். இந்த 12 ஆதித்தியர்களை நாம் ஆராதனைகள் செய்துவந்தால், எல்லாவிதமான பலன்களும் ஒட்டுமொத்தமாக கிடைக்கும்.

**சப்த ம்ருத்யுக்கள் :** மூலிகைகள் பல வகைகள் உள்ளன. மருந்துகளுக்கு மூலிகைள் ஆதாரம். இந்த மூலிகைகள் பொதுவாக 7 விதமான அம்சங்களில் அடங்கும். இந்த ஒவ்வொரு அம்சத்திற்கும் ஒரு தேவதை உண்டு. இந்த அனைத்து தேவதைகளையும் நாம் ஆராதித்து வந்தால் மருந்துகள் மூலம் நமக்கு நன்மைகள் கிடைக்கும். இந்த சாந்தி பந்ததிகள் திர்க்க ஆயுளையும், நல்ல ஆரோக்கியத்தையும் உத்தேசித்து செய்துக்கொள்ளப்படுகிறது. 60 வயது ஆனாலே பொதுவாக ஆரோக்கியம் குறையும். அந்த சமயத்தில் மருந்துகளின் உதவிகள் நமக்கு அவசியம். இந்த ம்ருத்யு தேவதைகளை ஆராதனை செய்து வந்தால் நமக்கு நல்ல மருந்துகள் சரியான சமயத்தில் கிடைத்து, அதனால் பயன்பெற்று ஆரோக்கியம் கூடும். ஆயுள் பலம் விருத்தியாகும்.

**இராசி தேவதைகள் :** மனித குலத்தை ஆட்டிப்படைப்பது நவகிரஹ தேவதைகள்தான். 9 கிரஹங்களின் சகாயம் ஒரு மனிதனுக்கு வாழ்நாள் முழுவதும் வேண்டும். இதை அனைவரும் அறிந்ததே.ஏஇந்த நவகிரஹங்கள ஒவ்வொரு ராசியாக மாறிக் கொண்டே தான் இருக்கும். இதனை கோசார சஞ்சாரம் என்பர். சஞ்சாரப் பலன்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கிரஹமும் ஒரு ராசியில் இருக்கும்போது ஒரு தனிப்பட்ட பலன்களை கொடுக்க வல்லது. இந்த கிரஹங்கள் எந்த இராசியில் இருக்கின்றதோ அந்த இராசி தேவதையின் பலன்களை அனுசரித்துத்தான் தன்னுடைய பலனை தரமுடியும். அதனால் நமக்கு நவகிரஹங்களின் சகாயமும், இந்த இராசி தேவதைகளின் சகாயமும் கண்டிப்பாக தேவை. அதனால் தான், இந்த சாந்தி பிரயோகங்ளில் இந்த இராசி தேவதைகளையும் ஆராதிக்கின்றோம்.

**பஞ்ச பிரம்மாதிகள் :** ஒரு மனிதனுடைய வாழ்க்கை அவரவருடைய தலைவிதியை பொருத்து மாறும். இந்த தலைவிதி ஒருவனின் முன் ஜன்மங்களில் அவன் செய்த பாவ-புண்ணியங்களை பொருத்து அமையும். இதனை நிர்ணயம் செய்பவர் பிரம்மதேவர்கள். பிரம்மதேவர்கள் நீதிபதிகள் போன்றவர்கள். இந்த பிரம்மாக்கள் ஐந்து வகையுள்ளனர் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸத்யோத்ஜாய பிரம்மா, வாமதேவ பிரம்மா, அகோர பிரம்மா, தத்புருஷ பிரம்மா, ஈசான பிரம்மா என ஐந்து பிரம்மாக்கள் உள்ளனர். இவர்களை நாம் ஆராதித்தால் நமது தலைவிதி மாறும். நம்முடைய சந்ததியினருக்கும் நல்ல தலைவிதி அமையும். உதாரணமாக, விதியை மதியால் வெல்லலாம் என்பது பழமொழி. இந்த பிரம்மாக்களை நாம் ஆராதித்தால் நமது தலைவிதியை மாற்றலாம். இது

எப்படியென்றால், நம்முடைய தலைவிதி போன பிறவியில் நாம் செய்த பாவ - புண்ணியங்களை பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. நாம் இந்த பிறவியில் இன்று வரையில் அதிகமான புண்ணிய பலன்களை செய்து வந்தால், பாவங்கள் செய்து இருந்தால் அதற்குரிய பரிகாரங்கள், நிவர்த்திகள் செய்து கொண்டால் மேற்சொன்ன அனைத்து தெய்வங்களின் அருளையும் பெற்றுவிட்டால், நம்முடைய பிறந்த தினத்தில் எழுதிய தலைவிதி நிச்சயமாக மாறும். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதைத்தான் விதியை மதியால் வெல்லலாம் என சொல்கிறோம். இதுபோல் தலைவிதியை மாற்றியமைப்பதில் இந்த பஞ்ச பிரம்மாக்கள் நமக்கு உதவுவார்கள்.

**பிரம்மா :** பிரம்ம தேவர் நமக்கு விதியையும் எழுதுவார், நாம் தபஸ் செய்தால் நமக்கு வரங்களையும் தரக்கூடியவர். மந்திர சித்தியென சொல்லப்படுவது இதைத்தான். நாம் தபஸ் மூலம் அதாவது தவம் மூலம் பிரம்மாவை பிரீதி செய்தால் நமக்கு வேண்டிய வரத்தை நிச்சயமாக பெறலாம்.

மேலும், உலகத்திலுள்ள அனைத்து பொருட்களையும், ஜீவன்களையும் சிரிஷ்டிப்பவர் இவரே. இவரைப்பற்றி பல புராணங்களிலும் பார்த்திருக்கிறோம்.

**சரஸ்வதி :** படிப்பு, ஞானம், புத்திசாலித்தனம், ஞாபகசக்தி, சமயோஜித புத்தி, முடிவெடுக்கும் திறன், நாவன்மை, பேச்சுத்திறன் என்ற அனைத்தையும் தருபவள் சரஸ்வதி.முப்பெரும் சக்திகளில் முக்கியமானவர். கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. இதனை அருள்பவள் சரஸ்வதி. நம் சந்ததியனர் அனைவருக்கும் நிச்சயமாக, தேவையான ஒரு பெரிய பலம். அதனால், சரஸ்வதியையும் இங்கு நாம் ஆராதிக்கின்றோம்.

**ஸ்ரீ மகாலக்ஷ்மி - ஸ்ரீ மகாவிஷ்ணு :** இவர்களது அனுக்கிரகங்களைப் பற்றி முதலிலேயே தெளிவாக பார்த்துள்ளோம். இவர்களுடைய கடாட்சம் நமக்கு அவசியம் தேவை.

**ருத்ரர் :** இவரைப்பற்றிய விபரங்களையும் நாம் முன்பே பார்த்துள்ளோம்.

**பார்வதி, கௌரி :** உடலின் சக்தி இவள். இவள் இல்லாமல் உலகில் எந்தப் பொருளும் அசையாது இவளே பராசக்தி. இராஜராஜேஸ்வரி, காமாட்சி உலகத்திற்கு தாய் போன்றவள். நமக்கு அனைத்தையும் அவளாகவே விரும்பித் தருபவள். இவளை திருப்தி செய்தால் மகாதேவனை திருப்தி செய்த பலன் நமக்கு கிடைக்கும். இவள் அனுகிரகத்தில் ஜீவனுமாக இருப்பவள். அதனால் இந்த சாந்தி பிரயோகங்களில் முக்கிய சக்தியாக அமைந்துள்ளாள்.

**க்ஷேத்திர பாலகர், அபயங்கரர் :** இவர்கள் புண்ணிய தலத்திற்கு காவல் தெய்வங்கள், பொதுவாக க்ஷேத்திர பாலகர்கள், எந்த கோயில்களில் இருக்கிறார்களோ அந்தக் கோயிலில் உள்ள பிரதான தெய்வங்களின் அனுக்கிரகங்களை ஒரளவிற்கு இவர்களாலும் கொடுக்க முடியும் என்பது சாஸ்திரம். அந்தந்த தலத்தின் மகிமையையும் ஜீவனையும் காப்பவர்கள் இவர்களே. க்ஷேத்திர பாலகர்களை கடைசியாக வணங்குவது சம்பிரதாயம். இவர்களையும் வணங்கினால்தான் பிரதான தேவதைகள் கொடுத்த பலன்களை பூரணமாக பெற இயலும் என்பது சாஸ்திரம். இந்த சாந்தி பிரயோகங்களில் எவ்வளவோ பலன்களை வேண்டி செய்துக் கொள்கிறோம். இத்தனை பலன்களையும் நாம் ஒருசேர பூர்ணமாக பெறுவதற்கு இவர்களுடைய அனுக்ரஹம் தேவை. இதனால், இவர்களையும் நாம் ஆராதிக்கின்றோம்.

**வாஸ்து பகவான் :** எல்லா கட்டிடங்களுக்கும் உயிராக இருப்பவர். ஒரு வீட்டிற்கு 100 ஆண்டுகள் ஆயுள் என்பர். ஒருகோயிலுக்கு 1000 ஆண்டுகள் ஆயுள் என்பர். இந்த ஆயுள் முழுவதும் பிரச்சனைகள் இன்றியிருக்க அதாவது இந்த கட்டிடங்களின் மூலம் நாம் நினைத்த சௌகர்யங்கள் கிடைக்க உதவுவார். ஒரு கட்டிடம் வாஸ்து அமைப்புப்படி அமைய வேண்டும். அமைந்தால் எல்லாப் பலன்களும் நல்லபடியாக நடக்கும். அதாவது எந்த அமைப்புகள் எப்படிஎப்படி இருக்க வேண்டும். எங்கெங்கு இருக்க வேண்டும் என்பதேயாகும். இப்படி அமைத்துவிட்டால் பலன்கள் அற்புதமாக நாம் நினைத்தபடி அமையும். மேலும், வாஸ்து தோஷங்கள் நீங்கவும், இவரை ஆராதிக்க வேண்டும். வீட்டில் அல்லது கட்டிடத்தில் வாஸ்து தோஷம் இருந்தால், வாஸ்து தோஷம் நிவர்த்தி செய்து கொள்ளலாம். அல்லது வாஸ்துபடி மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக முடியும்பொழுதெல்லாம்,ள வாஸ்து பகவானை பிரீதி செய்து கொண்டு வந்தால், எதாவது வாஸ்து தோஷம் இருந்தாலும் அது நிவர்த்தியாகி, அந்த வாஸ்து தோஷத்தினால் ஏற்படும் கெடுபலன்கள் குறையும்.இதனால்தான் இந்த சாந்தி பிரயோகங்களில் இவரையும் நாம் ஆராதிக்கின்றோம்.

**அஷ்டதிக் பாலகர்கள் :** அஷ்டதிக் பாலகர்கள் என்பவர்கள் 8 திசைக்கும் உரிய கடவுள்கள். இந்திரன், அக்னி, யமன், நைருதி, வருணன், வாயு, குபேரன், ஈசான்யன் என்ற 8 திக்பாலகர்களும் முறையே கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, என்ற எட்டு திக்குகளுக்கும் உரிய கடவுள்கள். மேலும், பூமிக்கும் ஆகாயத்திற்கும் இரு திக்பாலகர்கள் உள்ளனர். ஆகமொத்தம் 10 திக் பாலகர்கள் உள்ளனர். நாம் இந்த சாந்தி பிரயோகங்களில் இவர்கள் அனைவரையும் பிரீதி செய்கின்றோம்.

நாம் சேர்த்து வைத்த புண்ணிய பலன்கள் நம்மை விட்டு அகலக்கூடாது. இவர்களை நாம் வணங்கினால், நமக்கு எந்த திக்குககளில் இருந்தும் அதாவது திசைகளிலிருந்தும் நமக்கு ஆபத்து வந்து புண்ணிய பலன்களை அபகரிக்க இயலாது. உதாரணமாக ஒரு ஹோம குண்டத்தில் கூட இந்த அஷ்டதிக் பாலகர்களை ஆவாஹனம் செய்து நாம் கொடுக்கும் ஆஹுதிகளை எந்த தெய்வத்திற்கு கொடுக்கிறோமோ, அந்த தெய்வத்திற்கு மட்டுமே போய் சேரும்படி இந்த அஷ்டதிக் பாலகர்கள் காவலாக இருப்பார்கள். மேலும் ஒரு ஆச்சாரியார், விசேஷ பூஜைகள் செய்து கொள்ளும்போது, உடல் கட்டு என்று இந்த அஷ்டதிக் பாலகர்களை தன்னைச்சுற்றி ஆவாஹனம் செய்து கொள்வார்கள். காரணம் என்னவென்றால், அந்த பூஜை முடியும்வரை அவருக்கு எந்தவிதமான பாதிப்பும் வெளியிலிருந்தோ, மற்ற துர்தேவதைகள் மூலமோ வராமலிருக்க செய்துக்கொள்வது. இதனை கட்டு மந்திரம் என்றும் சொல்வார்கள். அதாவது தன்னை கட்டி கொள்ளுதல் என்று அர்த்தம். இதெல்லாம் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் முன்னேற்பாடுகள் ஆகும். மேற்சொன்ன எல்லா பலன்களுக்காவும், இந்த திக்பாலகர்களையும் நாம் ஆராதிக்கின்றோம்.

**அக்னி பகவான் :** அனைத்து பூஜைகளிலும் அக்னி பகவான் மிகவும் முக்கியத்துவம் பெற்றவர். ஹோமங்கள் மூலம் அனைத்து காரியங்களையும் சாதிக்க முடியும் என்பது சாஸ்திரம். ஹோமங்கள் மூலம் அனைத்து தெய்வங்களையும் பிரீதி செய்ய முடியும். வேத காலங்களில், ஸ்வாமிகள் விக்ரஹங்களோ, கோவில்களோ கிடையாது. மந்திரங்களும், ஹோமங்களும் மட்டும்தான். ஹோமங்கள் மூலம்அனைத்து தெய்வங்களையும் பிரீதி செய்தனர். பிறகு அடுத்த வரும் காலங்களில், மனிதனின் Concentration Power குறையக்குறைய அவனுக்கு மனதினை கட்டுபடுத்த சில உருவங்கள் தேவைப்பட்டது. அதுவே, பிற்காலங்களில் தெய்வ விக்ரஹங்களாக உருவாகின. பின்னர் கோயில்கள் வந்தன.

ஹோமங்களில் முதலில் அக்னியை ஆவாஹனம் செய்கிறோம். பிறகு அந்த அக்னியில் நாம் எந்த ஹோமம் செய்கின்றோமோ அந்த தெய்வத்தை ஆவாஹனம் செய்கிறோம். அந்த தெய்வத்திற்கு நாம் அக்னி பகவான் மூலம் ஆஹுதிகளை கொடுக்கிறோம். அந்த ஆஹுதிகளை, அக்னி பகவான் அந்த தெய்வத்திற்கு கொண்டுபோய் சேர்த்து, அந்த தெய்வம் கொடுக்கும் பலன்களை, ஹோமம் செய்து கொள்ளும் கர்த்தாவுக்கு, அதாவது, எஜமானனுக்கு கொண்டுவந்து சேர்க்கிறார் என்பது சாஸ்த்திரம். அக்னி பகவானை வேண்டும் மந்திரத்தின் அர்த்த சாரம் இப்படி அமையும். **ஹே அக்னி பகவானே! நாங்கள் கொடுக்கும் ஆஹுதிகளை ஸ்ரீ மகா கணபதி பகவானுக்கு கொண்டு போய் சேர்த்து அவர் கொடுக்கும் அனுகிரஹங்களை எங்களுக்கு கொண்டு வந்து சேருங்கள்** என்று பிரார்த்திப்பதாக அமையும். இந்த அனைத்து சாந்தி பிரயோகங்களிலும் அக்னி கார்யம் உண்டு. அதாவது ஹோமங்கள் உண்டு.

இந்த ஹோமங்களைப் பற்றி முன்பே விரிவாகப் பார்த்தோம். இந்த அக்னி பகவான் நாம் கொடுக்கும் ஆஹுதிகளை அனைத்து தெய்வங்களுக்கும் கொண்டு போய் சேர்த்து அவர்கள் கொடுக்கும் பலன்களை நமக்கு கொண்டுவந்து சேர்க்கிறார். இது எவ்வளவு முக்கியமான விஷயம் என்பது நமக்கு இப்பொழுது புரியும். அதனால், இவரை நாம் விசேஷமாக ஆராதிக்கின்றோம்.

ஒரு தெய்வத்தினை நாம் உபாசனை செய்யவேண்டும் என்றால் அந்த தெய்வத்தின் மூலமந்திரத்தினை ஒரு குறிப்பிட்ட அளவு ஜபம் செய்ய வேண்டும் என்பது நியதி. எவ்வளவு ஜபம் செய்கின்றோமோ, அதில் பத்தில் ஒரு பங்கு ஆவர்த்தி அதாவது தசாம்சம் என்று சொல்வது, ஹோமம் செய்யவேண்டும். இதனை புரச்சரணை விதி என்கிறோம். இப்படி செய்தால்தான் அந்த தெய்வம் திருப்தி அடையும். அவ்வளவு முக்கியமானது இந்த புரச்சரணமும், ஹோமமும் ஆகும். இதிலிருந்து அக்னி பகவானுடைய அருள் எவ்வளவு முக்கியம் என்பது புரியும்.

**ஸப்த மாதாக்கள் :** சாக்த வகை வழிபாட்டில் ஏழு பெண் தெய்வங்கள் சப்த மாதாக்கள் அல்லது சப்த மாத்ருக்கள் என்ற பெயரில் மிகவும் விசேஷமாக பூஜிக்கப்படுகிறார்கள். சப்த கன்னியர்கள் என்றும் அழைப்பது உண்டு. இவர்கள் முக்கியமான இந்து சமய தெய்வங்களின் சக்திகளாவர். பிராம்மி

(சரஸ்வதி), மாகேஸ்வரி (சிவசக்தி), கௌமாரி (குமார சக்தி), வைஷ்ணவி (லக்ஷ்மி) வாராகி, மகேந்திரி (இந்திராணி), சாமுண்டா (சாமுண்டி), என்னும் சக்திகள் எழுவரும் முறையே, பிரம்மா, சிவன், முருகன், விஷ்ணு, வராகமூர்த்தி, இந்திரன், யமன் என்போரின் சக்திகளாக இருந்து வேண்டியவருக்கு. வேண்டிய பலன்களைத் தருகின்றனர். பொதுவாக இந்த ஏழு தெய்வங்களை ஒரே கல்லில் செதுக்கியும் இருப்பார்கள். தனித்தனியாகவும் செதுக்கிக் இருப்பார்கள். இந்த கோவிலில் நாம் தனித்தனியாக வடித்து ஆவாஹணம் செய்ய உள்ளோம்.

**ரேணுகா பரமேஸ்வரி :** பொதுவாக ரேணுகா பரமேஸ்வரியை மாரியம்மன் என்ற பெயரில் அழைக்கிறோம். மேலும், பல பெயர்களால் அழைக்கப்படும் தெய்வமும் இவளே. மிகவும் சக்தி வாய்ந்த அம்சம். எல்லா கிராமங்களிலும் இவள் குடிகொண்டிருப்பாள். இவளை நினைத்தாலே நமக்கு அருளை வழங்க காத்துக்கொண்டுருக்கும் தெய்வம். பல குடும்பங்களுக்கு குல தெய்வமாகவும் விளங்குபவள். நாம் மனப்பூர்வமாக பக்தியுடன் வேண்டினால், சட்டென உடனே பலனைக் கொடுப்பவள். இப்படிப்பட்ட தெய்வத்தின் சகாயம் நமக்கு எப்பொழுதும் வேண்டும். எல்லா ஆபத்து சமயங்களிலும் உடனே அனுக்கிரஹம் செய்பவள்.

**பூர்ணா புஷ்களாம்பா சமேத ஐயனாரப்பன் :** ஊர் காவல் தெய்வம் என்று இவரை அழைக்கிறோம். நமக்கு எப்பொழுதும் ஒரு பாதுகாப்பு தேவை. அதுபோல் ஊருக்கும் ஒரு பாதுகாப்பு தேவை. நமது பாதுகாவலர்கள் நம்மை எப்போதும் பாதுகாப்பார். அதுபோல. இந்த க்ஷேத்திரத்தில் உள்ள எல்லா தேவதைகளையும், அவர்களை தரிசனம் செய்து ஆராதிக்க வந்தவர்களையும், மேலும் இந்த க்ஷேத்திரத்தில் உள்ள அனைத்து அசையும், அசையா சொத்துக்களையும் பாதுகாத்துக் கொடுப்பவர். இவருடைய அனுகிரஹம் கண்டிப்பாக நாம் அனைவருக்கும் தேவை. அதனால் இவரையும் நம் ஆராதிக்கிறோம்.

**தெக்ஷிணாமூர்த்தி :** சிவபெருமானின் யோக நிஷ்டை அம்சம் இவர். சாட்ஷாத் இவர் சத்குரு. இவரை தரிசனம் செய்தாலே எல்லா பாவங்களும் குறையும். புண்ணிய பலன்களும் கூடும். குருபார்க்க கோடி புண்ணியம். குருவின் தரிசனம் நமக்கு எல்லா பாக்கியங்களையும் சேர்க்கும். அதனால் கடைசியாக இங்கு இந்த தெக்ஷிணாமூர்த்தியை நாம் தரிசனம் செய்தால், இங்கு நாம் தரிசித்த அனைத்து தெய்வங்களின் பலன்களையும் அபிவிருத்தி செய்து கொடுப்பார். இதனால் நமக்கு பூர்ணபலன்கள் நிச்சயம் உண்டு.

**நிவகிரஹங்கள் :** உலகத்தில் உள்ள எல்லா காரகத்வத்திற்கும் இந்த 9 கிரகங்களே அதிபதி ஆவார்கள். ஒவ்வொரு கிரகமும் ஒரு தனிப்பட்ட பலன்களை தர வல்லவர்கள். அவரவர்கள் ஜாதகப்படியும் நல்லதையும், கெட்டதையும் செய்யக் கூடியவர்கள். இவர்களுடைய அருளை சுருக்கமாக இங்கு பார்ப்போம்.

**சூரியன் :** ஆத்ம பலம், சரீர பலம் கொடுப்பவர். தந்தை மூலம் நன்மையை செய்பவர். கண் சம்மந்தமான நோய்களை குறைப்பவர். அரசாங்கம் மூலம் நன்மை தருபவர். தன்னம்பிக்கையை ஏற்படுத்துவர்.

**சந்திரன் :** மனோ பலம் கொடுப்பவர். புத்திசாலித்தனம், அறிவுக் கூர்மை, ஞாபக சக்தி, முடிவெடுக்கும் திறன், நாவன்மை, பேச்சுத்திறமை என்று பல நன்மைகளை செய்வார். தாயார் மூலம் நன்மைகளை செய்து கொடுப்பவர். வெள்ளை நிறப்பொருள், திரவப்பொருள் மூலம் நன்மைகளை ஏற்படுத்துபவர்.

**அங்காரகன் :** வீர, தீர, பராக்கிரம செயல்களை செய்விக்கக்கூடியவர். வெற்றியைக்கொடுப்பவர். தைரியமாக பேசவும், செயல்படவும் அனுக்கிரகிப்பவர். சகோதரர் மூலம் நன்மை ஏற்படுத்துவார். பூமி, அக்னி, மூலம் நன்மைகளை கொடுப்பவர், கடனை குறைப்பார், நோயைக் குறைப்பார், எதிரிகளின் தொல்லையை குறைப்பார்.

**புதன் :** நன்றாக படிக்கவும், முக்கியமாக கணக்கு சம்மந்மமான படிப்பிலும், கணிணி சம்பந்தமான படிப்பிலும் முன்னேற்றத்தை தருபவர். வியாபார காரகன் ஆவதால் அனைத்து வியாபாரிகளுக்கும் நன்மையை செய்பவர்.

**குரு :** பொருளாதார விஷயங்களில் மேன்மை கிடைக்கவும். சிக்கல்கள் தீரவும் வழி செய்வார். குருவின் மூலம் மந்திர சித்தியை ஏற்படுத்துவார். பிள்ளைகள் மூலம் நன்மைகள் செய்வார். குலதெய்வ அனுகிரஹம், பெரியோர்கள் ஆசீர்வாதங்கள், க்ஷேத்திராடனப்பலன்கள் இவைகளை

பெற்றுத்தருவார். வாழ்க்கையில் எப்பொழுதும் கௌரவத்தை காப்பாற்றுவார்.

**சுக்கிரன் :** பெண்களுக்கு மாங்கல்யத்துவம், சுமங்கல்யத்வம் அபிவிருத்தி செய்து கொடுப்பார். வீடு, மனை, வாகனங்கள், பால் பாக்கியம், சுபம், சௌக்கியம், சௌகர்யம், சௌபாக்கியங்கள், மன நிம்மதி அனைத்தையும் தருபவர். மகாலக்ஷ்மி கடாட்சத்தை கொடுப்பவர். பெண்கள் மூலம் நன்மைகளை ஏற்படுத்துவார்.

**சனி :** நமக்கு தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்ட சாபங்கள், பாவங்கள், தோஷங்கள், பிதுர் சாபங்கள், அனைத்தையும் நிவர்த்தி செய்வார். நல்ல சேவகர்களை கொடுப்பார்.எல்லாக் கஷ்டங்களையும் குறைப்பார். சனி ஜாதகத்தில் சரியில்லாத போதும், கோசாரப்படி நல்ல நிலையில் இல்லாதபோதும் கெடுபலன்களை அதிகம் கொடுப்பார் பரிகாரம் செய்து கொண்டால் கெடுபலன்களை கண்டிப்பாக குறைப்பார்

**இராகு :** திடீர் யோகத்தையும், போகத்தையும் கொடுப்பார். சர்ப்ப தோஷம், நாகதோஷம், கால சர்ப்ப தோஷம், புத்திர தோஷம் இவைகளை நிவர்த்தி செய்வார். விஷ சம்பந்தமான, ஒவ்வாமை சம்மந்தமான நோய்களை கட்டுப்படுத்துவார்.

**கேது :** ஞானத்தையும், மோட்சத்தையும் கொடுப்பார். சர்ப்ப தோஷம், நாக தோஷம், கால சர்ப்ப தோஷம், புத்திர தோஷம் இவைகளை நிவர்த்தி செய்வார். விஷ சம்பந்தமான, பித்த சம்மந்தமான நோய்களை கட்டுபடுத்துவார். நீதிமன்ற வழக்குகள், வியாஜ்யங்கள், சண்டைகள், கட்ட பஞ்சாயளத்து இவைகளை நமக்கு சாதகமாக்குவார்.

இந்த ஒன்பது கிரகங்களையும் நாம் ஆராதனை செய்யும் போது, நமக்கும் நம் சந்ததியினர் அனைவருக்கும் மேற்சொன்ன எல்லா பலன்களும் நிச்சயம் கிடைக்கும்.

மேலும், பொதுவாக **ஆதித்யாய, சோமாய, மங்களாய, புதாயச, குரு, சுக்ர, சனிப்யச்ச, ராகவே, கேதவே நமஹ** என்ற ஸ்லோகத்தை நாம் தினமும் ஒரு முறையாவது சொல்லிக் கொண்டே வந்தால் வாழ்க்கையில் பெரிய கஷ்டங்கள் தீர்ந்து, சுபீட்ஷம் ஏற்படும் என்பது நிச்சயம்.

**கருடன் :** மகாவிஷ்ணுவிற்கு வாகனமாக இருப்பவர். பெரிய திருவடி என்றும் கூறுவர். கருட உபாசனை பல நன்மைகள் செய்து கொடுக்கும். கருட தரிசனம் மிகவும் விசேஷமானது. கருடவாகன சேவை நமக்கு பாக்கியத்தை கொடுப்பது. ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பரிபூர்ண கடாட்சத்தை பெற அருள்வார். விஷ ஜஊஜந்துக்கள் மூலம் பெற்ற கஷ்டங்களை குறைப்பார். கருட மந்த்ர ஜபம் விஷ முறிவு ஏற்படுத்தும்.

**ஆஞ்சநேயர் :** அசாத்திய காரியங்களை செய்பவர். இவர் நித்திய சிரஞ்சீவி, நினைத்த மாத்திரத்தில் நம் முன்னே தோன்றுவார். சிறந்த ராம பக்தர். எங்கெல்லாம் ராமாயண கதாகாலேட்ஷேபம் நடைபெறுகிறதோ. அங்கெல்லாம் வந்து அமர்ந்து இராமர் கதையை கேட்பாராம். மேலும், ராம நாமம் எங்கெல்லாம், ஒலிக்கிறதோ அங்கெல்லாம் பிரத்யட்ஷம் ஆவாராம். பொதுவாக உற்சவ காலங்களில் முதலில் விநாயகரையும், கடைசியில் ஆஞ்சநேயரையும் ஆராதிப்பது சம்பிரதாயம்.

இந்த சாந்தி பிரயோகங்கள், ஆயுள் விருத்திக்காகவும், ஆரோக்கிய விருத்திக்காகவும் செய்துகொளளப்படுவது. பொதுவாக ஆசிர்வாதம் செய்வதில் **ஆயுஷ்மான் பவ** என்பது மிகவும் உயர்ந்தது. ஆயுள் இருந்தால் தான், நம் அனைத்து பாக்கியங்களையும் அனுபவிக்க முடியும். இந்த எல்லா சாந்தி பிரயோகங்களிலும் இந்த நித்திய சிரஞ்சீவிநியான ஆஞ்சநேயரின் அனுக்கிரகம் பெறுவதால் நமக்கு பூர்ண ஆயுள் பலம் கிடைக்கும். இவர் இந்த அமிர்த சிரஞ்சீவிநிகள் திருக்கோவிலில் மிகவும் முக்கியமானவராவார். இவரை நாம் கடைசியில் வணங்கி பூர்ண ஆயுளை நமக்கும், நமது சந்ததியினருக்கும் பெறுவோம்.

தீர்க்க ஆயுளையும், நல்ல ஆரோக்கியத்தையும், செல்வத்தையும், அனைத்து தெய்வங்களின் அனுக்கிஹங்களையும் இந்த ஸ்ரீ அமிர்த சிரஞ்சீவிநிகள் திருக்கோயில்களில் அமர்ந்துள்ள தெய்வங்கள் நமக்கு கொடுக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

*பொதுவாக, கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்ரஹங்களுக்கு 1000 வருடங்களுக்கு மேல் ஆயுள் என்றும் அந்த கோயில் கட்டிடத்திற்கும் 1000 வருடங்களுக்கும் மேல் ஆயுள் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.*

*நாம் இந்த கோயில்கள் கட்டிமுடிக்க, நம்மால் ஆன கைங்கர்யங்களை செய்து கொடுத்தால், இந்த புண்ய பலன்கள் நம்முடைய சந்ததியினருக்கு 1000 வருடங்களுக்கு போய் சேரும். நமக்கு இந்த மனித பிறவி கிடைத்தது என்றால், நாம் சென்ற பிறவியில் செய்த புண்ய பலன்களும், நம்முடைய முன்னோர்கள் செய்த புண்ய பலன்களும் ஆகும்.*

*முதலில் இந்த 309 கல் விக்ரஹங்களையும் வடித்துவிட்டு தான் விழுப்பிரத்திற்கு பக்கத்தில் 20 ஏக்கர் இடம் பார்க்கலாம் என்றிருக்கின்றோம்.*

*தற்பொழுது இந்த கல் விக்ரஹங்களை வடிக்கும் வேலைகள்* **மகாபலிபுரத்திலும், காஞ்சிபுரத்திலும்** *நடந்துக் கொண்டு இருக்கின்றன.*

*தங்களால் முடிந்தால் ஒரு விக்ரஹமோ, அல்லது, அதற்கு மேலோ, தங்கள் இஷ்டப்படியும் சௌகரியப்படியும் தெய்வ கைங்கர்யமாக செய்து கொடுக்க வேண்டுகிறோம்.*

*மேலும், சில விஷயங்களை தங்களுக்கு சொல்லலாம் என்று இருக்கின்றோம். நாம் எப்பொழுதும் புண்ணிய பலன்களை சேர்த்து கொண்டே வருவது நல்லது. வங்கியில் சிறுக சிறுக சேர்க்கும் சேமிப்ப வங்கிக் கணக்கு மாதிரி. புண்ணிய பலன்களில்,மிகவும் விசேஷமானது இந்த மாதிரி அபூர்வமான கோவிலில் ஆவாஹனம் ஆகும் கல் விக்ரஹங்களை செய்து கொடுப்பது. காரணம் என்னவென்றால்,* **கல் விக்ரஹத்திற்கு ஆயுள் 1000 வருடங்களுக்கு மேல்** *பன்று சொல்லப்படுகிறது. இந்தியாவில் உள்ள பல கோவில்களில் உள்ள விக்ரஹங்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்க பட்டவை என்பதனை நாம் அனைவரும் அறிவோம். இந்த விக்ரஹங்களை செய்து கொடுத்த குடும்ப சந்தியனர் அனைவருக்கும் இந்த 1000 ஆண்டுகளுக்கு மேல் புண்ணிய பலன்கள் இந்த விக்ரஹங்களால் வந்து கொண்டு இருக்கின்றது. நாம் நம்முடைய பல தலைமுறைகளுக்கு, அதாவது, மகள்,பேரன், கொள்ளு பேரன், எள்ளு பேரன் என்ற நமது சந்ததியினருக்கு சொத்து சேர்த்து வைக்கலாம். கூடவே புண்ணிய பலன்களையும் சேர்த்து வைத்தால் தான், இந்த சொத்துகள் நம் சந்ததியினருக்கு உபயோகமாக போய் சேரும். இந்து மத சம்பிரதாயத்தில்* **குல விருத்தி, குடும்ப விருத்தி, புத்திர விருத்தி, கோத்திர விருத்தி, வம்ச விருத்தி என்று சொல்லப்படும் அனைத்து விருத்திகளும்** *நாம் சேர்த்து வைத்த நம்முடைய புண்ணிய பலன்களை பொருத்தே அமையும். அனைத்து புண்ணிய பலன்களிலும், இந்த மாதிரியான, அதாவது, இந்த விரேஷமான விக்ரஹங்களை செய்து கொடுத்தால் என்ற புண்ணிய பலன்கள் பல தலைமுறைகளுக்கு நமக்கு நல்ல பலன்களை கொடுக்கும். அதனால், தாங்கள் இந்த புத்தகத்தில் உள்ள விக்ரஹங்களில் தங்களால் முடிந்த அளவு செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.*

1. *நட்சத்திர அதி தேவதைகள் 27. ஒவ்வொன்றும் 3 1/2 அடி உயரம்* **ரூ.20,000** *(ஒரு விக்ரஹத்திற்கு ) இன்னும் 10 விக்ரஹங்களுக்கு மட்டும் உபயதாரர்கள் தேவைபடுகிறார்கள்.*

2. *மற்ற அனைத்து விகரஹங்களும் ஒவ்வொன்றும் 2 1/2 அடி உயரம்* **ரூ.15,000** *(ஒரு விக்ரஹத்திற்கு)*

**மேலும் உங்களுக்கு ஒரு விண்ணப்பம்**

1. *தாங்கள் ஒரு விக்ரஹம் அல்லது அதற்கு மேல் தங்களால் முடிந்த அளவு விக்ரஹங்கள் செய்து கொடுக்கலாம்.*

2. *தங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொருவரின் பெயரிலும் ஒரு விக்ரஹம் செய்து*

கொடுக்கலாம்

3. குறைந்த பட்சம் ஒரு விக்ரஹததிற்கு செய்ய முடியவல்லையென்றால், தங்களால் முடிந்த அளவு காணிக்கையை அனுப்பலாம்.

4. தங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்கள ஆகியவர்களின் பெயர், முகவரி,போன் நெம்பர் என்று எங்களுக்கு தெரிவித்தால், அவர்ளையும் நாங்கள் தொடர்பு கொள்கிறோம்.

5. முடியும் பொழுது என்னை நேரிலோ, தொலைபேசி மூலமோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும், மேலும் விஷயங்களை தங்களுக்கு தெளிவுப்படுத்தலாம் என்று நினைக்கின்றோம்.

இந்த விக்ரஹகளுக்கான தொகையை “SRI MAHALAKSHMI YOHA PEETAM”என்ற பெயரில் DD/Chennai Local Cheque மூலம். மேலே குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.மேலும், எந்தவிதமான விளக்கங்களுக்கும் சந்தேகங்களுக்கும் தயவு செய்து என்னை தொடர்பு கொள்ளவும்.

தங்கள் பெயர்கள் **திருக்கோவிலின் தர்மவான்கள்** என்ற கல்வெட்டுகளில் பதிக்கப்படும்.

இந்த ஸ்ரீ அமிர்த சிரஞ்சீவிநிகள் திருக்கோயில்கள் ஸ்தாபிதம் ஆக எல்லா ஏற்பாடுகளும் மிக விரைவாக நடந்து கொண்டிருக்கின்றன. அது வரையில் நம் ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீடத்தில், கீழேக் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் உள்ள ஸ்ரீ நித்ய ஹோம மண்டபத்தில் ஸ்ரீ ஆயுஷ்ய ஹோமம், ஸ்ரீ உக்ர ரத சாந்தி, ஸ்ரீ சஷ்டியப்த பூர்த்தி சாந்தி என்று அழைக்கப்படும் 60ம் கல்யாணம், பீம ரத சாந்தி, விஜய ரத சாந்தி, சதாபிஷேகம், பூர்ணாபிஷேகம் ஆகிய சாந்தி பிரயோகங்கள் செய்து கொள்ளலாம். இங்கும் எல்லா வசதிகளும் உள்ளன.

# ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீடம்
## நித்ய ஹோம மண்டபம்

55, துளசிங்கம் தெரு, சாமுண்டீஸ்வரி நகர்,
குரோம்பேட்டை, சென்னை-44.

தேவைப்படுபவர்கள் அதாவது மேலே குறிப்பிட்ட சாந்தி பிரயோகங்கள் இங்கு வந்து செய்துகொள்ள விருப்பப்பட்டவர்கள் கீழ்கண்ட அலுவலக முகவரியிலோ அல்லது மேற்கண்ட முகவரியிலோ தொடர்பு கொள்ளவும்.

தொகுத்தவர் :

**குருஜி டாக்டர். கல்யாணராம அய்யர்** M.A. M.Com., Ph.D.,

ஸ்தாபகர் :

## ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீடம்

அலுவலகம் : 1/B, முதல் மாடி, சி.எல்.சி. ஒர்க்ஸ் ரோடு,
குரோம்பேட்டை, சென்னை - 44.
செல் : 94444 13521 போன் : 2241 5152

**ஸ்ரீ வைஸ்வாநரக்னி பிராயச்சித்த ஹோமம் :** ஸ்ரீ வைஸ்வாநரக்னி பிராயச்சித்த ஹோமத்தின் முக்கிய சாரத்தை இங்கே கொடுக்கிறோம். இதை அனைவரும் ஒருமுறைக்கு இரு முறை படித்து தெரிந்து கொள்ள வேண்டியது.

இந்த ஹோமத்தில் அக்னி பகவானை பிரார்தித்து அக்னிமூலமாக அஹுதிகள் கொடுக்கப்படுகின்றன.

-ஹே அக்நி தேவனே!

உங்களுக்கு கோபம் தரக்கூடிய செய்கைகளை செய்த பாபங்களிலிருந்து என்னை

விடுவிப்பீர்களாக. ஜீவனத்திற்காக பொய் சொன்ன பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக.

யக்ஞங்களில் நேர்ந்த குறைபாடுகளால் ஏற்பட்ட பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக. யக்யம் சம்பந்தப்படாத வேறு கர்மாக்களில் நேர்ந்த குறைபாடுகளால் ஏற்பட்ட பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக.

உறவினர்கள் மற்றும் நண்பர்களின் புகழ்ச்சியால் கர்வம் கொண்டு, தேவர்களுக்கு அபசாரங்கள் இழைத்த பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பாயாக. என்னை கடன்களிலிருந்து விடுவிப்பாயாக. நான் கருவில் இருந்த காலத்தில் என் தாய்-தந்தையரால் இழைக்கப்பட்ட பாபங்களின் தாக்கத்திலிருந்து என்னை விடுவிப்பாயாக.

நான் அறியாப்பருவத்தில் என் தாய் - தந்தையருக்கு இழைத்த ஹிம்ஸைகளால் விளைந்த பாபங்களிலிருந்து என்னை கரையேற்றுவாயாக.

என் பெற்றோருக்கு மனக் கஷ்டங்கள் ஏற்படுத்திய பாபங்களிலிருந்து என்னை விடுதலை அளிப்பாயாக. என் புத்திரன் முதாலனோரோடு கூடி நான் இழைத்த அனைத்துப் பாபங்களிலிருந்தும் எனக்கும் விமோசனம் அளிப்பாயாக.

அறிஞர்கள் அவையில் நான் செய்திருக்கக்கூடிய பிழைகளால் நேர்ந்த பாபங்களை அகற்றி என்னைப் புண்ணிய லோகம் சேர்ப்பாயாக. எக்காலத்தும் நான் செய்த பாபங்களிலிருந்து என்னைச் சுத்தம் செய்வாயாக, இங்கு வந்து எனக்கு தீர்க்காயுள் அருள்வாயாக. என் விரோதிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

என் குழந்தைகளைக் காப்பாற்ற இயலாது அவர்களுக்கு கடன்பட்டிருந்தால், கடனாக வாங்கிய முதலை சாப்பிட்டுவிட்டுத் திருப்பித்தர இயலாதவனாக இருந்திருந்தால், அவ்வாறு பட்ட கடன்களிலிருந்து என்னைப் காப்பாற்றுவாயாக.

நான் திருடியிருந்தால், பார்க்கத் தகாதவற்றைப் பார்த்திருந்தால், அத்தகைய பாபங்களிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக. சுருக்கமாக அல்லது விஸ்தாரமாக மற்றவர் மீது பழி சுமத்துதல், பிறரை ஹிம்ஸித்தல், கோள் சொல்லுதல் போன்ற யக்ஷ்மாதி ரோகங்களுக்குக் காரணமான பாபங்களை என்னிடமிருந்து அகற்றுவீர்களாக.

ரோகத்தை ஏற்படுத்தும் பாபங்களையும், அலக்ஷ்மீகரத்தையும் அகற்றிக் கொள்ள அருள்வீராக. இந்த கர்மாவினால் நாங்கள் பாபங்கள் நீக்கப்பட்டவராய், மங்களங்கள் சேரப்பெறறவராய் அழகுள்ளவராய் ஆக அருள்வீர்.

எங்களுக்கு நிறைந்த செல்வத்தை அருளி, கொஞ்ச நஞ்சமுள்ள பாபங்களையும் களைந்து, எங்களைப் புனிதனாக்குவீராக. எங்கள் எதிரிகளை அகற்றும், எங்களுக்கு சுகங்களை அருளும்.

எனக்கு தீங்கு நினைக்கும், விளைவிக்கும் எதிரிகளைத் தீயிலிட்ட கட்டைகளாக்குவீராக. என்னை வெறுக்கும், நான் வெறுக்கும், எதிரிகளைச் சாம்பலாக்குவீராக.

நான் கொடுத்த செல்வத்ததைத் திருப்பாதவன், என் செயல்களுக்கு இடையூறு விளைவிப்பவன், என்னை நிந்திப்பவன், என்னைக் கொல்ல நினைப்பவன் ஆகிய நால்வகை எதிரிகளையும் அழித்திடுவீராக. என்னைச் சார்ந்தவர்களது அழகு, பலம் போன்றவை மேன்மை அடைய அருள்வீராக.

நீயும் உன்னைச் சார்ந்தவர்களும், உன் கடாக்ஷமும் திரும்பத்திரும்ப என்னைச் சுற்றி வந்து, எனக்கு லக்ஷக்கணக்கான செல்வத்தையும் என்னிடம் முன்னால் இல்லாத செல்வத்தையும் சம்பாதித்துக் கொடுப்பாயாக.

புண்ய லோகத்தில் உள்ளவர்கள் ஸுஹ்ருதம் உள்ளவர்கள், சந்தோஷம் மிக்கவர்கள், ரோகமற்றவர்கள், பிறரால் வஞ்சிக்கப் படாதவர்கள். தங்கள் ஸந்ததியினரைப் பார்த்த வண்ணம் அருள் செய்பவர்கள். அத்தகைய புண்ய லோகம் எனக்கு கிடைக்கட்டும்.

எந்தெந்த பாபத்திற்கு என்னென்ன பிராயச்சித்தம் என்பதை நீ அறிவாய். எனவே, உன்னை பிரார்த்திக்கிறேன். இப்பிறவியிலும், முற்பிறவியிலும் மனம் வாக்கு காயங்களால் நான் செய்துள்ள அனைத்துப் பாபங்களிலிருந்தும் என்னை விடுவிப்பாயாக.

மேலும் மாத்ரு சாபம், பித்ரு சாபம், குரு சாபம், குல தெய்வ சாபம், இஷ்ட தெய்வ சாபம், கிரஹதேவதா சாபம், கிராம தேவதா சாபம் இவையெல்லாம் நிவர்த்தியாகட்டும். மேலும், நான் தண்ணீர் பூமி, வாயு, அக்னி, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களுக்கு செய்த அபச்சாரங்களை இந்த ஹோமம் நிவர்த்தி செய்யட்டும். என் வாழ்க்கையில் ஏற்படும் கண்டங்களை தாண்டி வரச் செய்யட்டும்.

*(மேலும், இந்த ஹோம முடிவில் புரோகிதர் அக்னி பகவானை வேண்டும் மந்திரத்தின் அர்த்தமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.)*

*ஹே அக்னி பகவானே! என் எஜமானனுக்கு தீர்க்காயுளும், பலமும் அளிப்பாயாக.*

*ஹே வருணனே! எஜமானன் மீண்டும் நிறைந்த பலம் அடையச் செய்வாயாக.*

*ஹே, அதிதி தேவதையே! தாயைப்போல தாயைப் போல அவருக்கு ஹிதம் அளிப்பாயாக.*

*ஹே விஸ்வே தேவர்களே அவர் முதுமைக் காலம் வரை வாழ*

*அருள்வீராக.*

*ஹே எஜமான தம்பதிகளே அக்னியில் ஆஜ்ய ஆஹுதிகள் அளித்து கர்மானஷ்டானங்களைத் தொடங்கியுள்ளீர்கள். இதைத் தொடருங்கள். ஒருவருக்கொருவர் இணைபிரியாதிருங்கள். உங்கள் கர்மானுஷ்டானங்கள் உங்கள் கோத்ரம் (குடும்பம்) முழுவதற்கும் பலனளிப்பதாக உள்ளதென்பதை மறவாதீர்கள்.*

- சுபம் -

# ஸ்ரீ மகாலக்ஷ்மி யோக பீடம்

அலுவலகம் : 1/B, முதல் மாடி, சி.எல்.சி. ஒர்க்ஸ் ரோடு, குரோம்பேட்டை,
சென்னை – 44. செல் : 94444 13521, போன் : 044-2241 5152
Website : www.amirdham.com E-mail : guruji@amirdham.com

**குருஜி டாக்டர். கல்யாணராம அய்யர் M.A. M.Com., Ph.D.**

# ஸ்ரீ நடசத்திர அதிதேவதைகள்

*அன்புடையீர், வணக்கம்.*

*அனைவருக்கும் மஹாலக்ஷ்மி கடாட்சமும் தெய்வ பலமும் நிச்சயமாக வேண்டும். இந்த பலன்களால் நமக்கு வாழ்க்கைக்கு வேண்டிய சுப, சௌக்ய, சௌகரிய, சௌபாக்யம், தீர்க்க ஆயுள், ஆரோக்கியம் நிச்சயமாக கிடைக்கும்.*

*நமக்கு கிடைத்த அருளையும், செல்வ வளத்தையும் எப்பொழுதும் விருத்தி செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.*

*இந்த விசேஷமான பலன்கள் நமது ஸ்ரீ மஹாலக்ஷ்மி யோக பீட பக்தர்கள் அனைவருக்கும் ஒரு சேர கிடைக்க, பலவித பூஜைகளையும், ஹோமங்களையும் செய்து கொண்டு வருகின்றோம்.*

**நமது நித்ய ஹோம மண்டபத்தில் அதாவது நெம்பர் 55, துளசிங்கம் தெரு, சாமுண்டீஸ்வரி நகர், குரோம்பேட்டை, சென்னை - 44, என்ற முகவரியில் உள்ள நமது மண்டபத்தில் கீழ்க்கண்ட விபரப்படி ஹோமங்கள் நடைபெற்றன.**

## ஸ்ரீ நட்சத்திர ஹோமம்

**காலம் : 15.6.2012 முதல் 12.7.2012 வரை (28 நாட்கள்)**

*தினமும் காலை 9.00 மணிமுதல் நன்பகல் 12.00 மணி வரை*

| | | |
|---|---|---|
| 15.6.2012 அஸ்வினி | 24.6.2012 மகம் | 3.7.2012 மூலம் |
| 16.6.2012 பரணி | 25.6.2012 பூரம் | 4.7.2012 பூராடம் |
| 17.6.2012 கிருத்திகை | 26.6.2012 உத்திரம் | 5.7.2012 உத்திராடம் |
| 18.6.2012 ரோகிணி | 27.6.2012 அஸ்தம் | 6.7.2012 திருவோணம் |
| 19.6.2012 மிருகசீரிஷம் | 28.6.2012 சித்திரை | 7.7.2012 அவிட்டம் |
| 20.6.2012 திருவாதிரை | 29.6.2012 சுவாதி | 8.7.2012 சதயம் |
| 21.6.2012 புனர்பூசம் | 30.6.2012 விசாகம் | 9.7.2012 பூரட்டாதி |
| 22.6.2012 பூசம் | 1.7.2012 அனுஷம் | 10.7.2012 உத்திரட்டாதி |
| 23.6.2012 ஆயில்யம் | 2.7.2012 கேட்டை | 11.7.2012 ரேவதி |

**12.7.2012** அன்று நட்சத்திரம் சரியாக தெரியாதவர்களுக்கும், அந்த அந்த நட்சத்திரத்தன்று ஹோமத்தில் கலந்துகொள்ள முடியாதவர்களுக்கும் நட்சத்திர ஹோமம் மற்றும் எல்லா ஹோமங்களும் செய்யப்பட்டன.

**15.6.2012 முதல் 11.7.2012 வரை 27 நாட்கள்** ஒவ்வொரு நாளும் அந்த நாளின் நட்சத்திர அதிதேவதைக்கு விசேஷமான ஹோமங்களும் மற்றும் ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்ரீ நவக்கிரஹ ஹோமம், ஸ்ரீ மகா லக்ஷ்மி குபேர ஹோமம், ஸ்ரீ ஜயாதி ஹோமம் செய்யப்பட்டன.

**உங்கள் நட்சத்திர அதிதேவதையை தரிசிக்க வாருங்கள்**

நட்சத்திர அதி தேவதைகளின், பஞ்சலோக விக்ரஹங்களோ அல்லது கல் விக்ரஹங்களோ இன்று வரை எங்குமே இருப்பதாக தெரியவில்லை. உலகிலேயே நம் இடத்தில்தான் முதன் முதலில் பஞ்சலோக விக்ரஹங்களாகவும், கல் விக்ரஹங்களாகவும் உள்ளன. அப்படிப்பட்ட அபூர்வமான விக்ரஹங்களை தரிசிக்கும் பாக்கியம் புண்ணியத்திலும் புண்ணியம். இந்த பாக்கியம் உங்களை போன்ற தர்மவான்களுக்கு இப்பொழுது கிடைக்கின்றது. மேலும், உங்கள் நட்சத்திர அதிதேவதையை தரிசித்து இந்த அதி தேவதையின் பரிபூரண கிருபா கடாட்சம் தாங்கள் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இந்த புத்தகத்தில் நட்சத்திர அதிதேவதைகள் என்றால் என்ன? இந்த அதிதேவதைகளை நாம் வணங்கும் பொழுது நமக்கு என்னென்ன பலன்கள், எப்படி கிடைக்கும் என்ற விபரங்களும் ஒவ்வொரு நட்சத்திர அதிதேவதைகளின் மந்த்ரங்களும் இந்த புத்தகத்தில் கொடுத்துள்ளோம். வேண்டுபவர்களுக்கு உங்களுடைய நட்சத்திர அதி தேவதையின் காயத்ரி மந்த்ரத்தையும் தர உள்ளோம். மேலும், உங்களுடைய பிறந்த நட்சத்திரத்தின் பெயரையும் மந்த்ரத்தையும் தெரிந்து கொண்டு பூஜைகள் செய்து வந்தால், மிகவும் விசேஷமான பலன்களும், மன அமைதியும், சுபீக்ஷமும் கிடைக்கும்.

தற்பொழுது, கிழ்க்கண்ட பூஜைகள் நடைபெறுகின்றன :-

1. விருப்பப்படுபவர்கள் அவர்கள் ஜென்ம நட்சத்திரத்தன்று, அதாவது நட்சத்திரப்படி வரும் பிறந்த நாள் அன்று இந்த கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்து கொள்ளலாம். கட்டணம் ரூபாய் **200.நேரில் வரமுடியாதவர்கள்** முன்கூட்டியே பணம் அனுப்பி வைத்தால், அர்ச்சனை செய்து பிரசாதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.நேரில் வருபவர்களும் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். அர்ச்சனை நேரம் காலை 9.00 மணிமுதல் காலை 10.00 மணி வரை மட்டும்.

2. விருப்பப்படுபவர்களுக்காக, அவரவருடைய ஜென்ம நட்சத்திரத்தன்று அதாவது நட்சத்திரப்படி வரும் பிறந்த நாளன்று, நமது ஹோம மண்டபத்தில் ஸ்ரீ மகா கணபதி ஹோமம், ஸ்ரீ நவகிரக ஹோமம், ஸ்ரீ நட்சத்திர ஹோமம், ஸ்ரீ ஆயுஷ்ய ஹோமம், ஸ்ரீ தன்வந்திரி ஹோமம், ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம், ஸ்ரீ ஜயாதி ஹோமம், செய்து வைக்கப்படும். கட்டணம் ரூபாய் **5,000.**நேரில் கலந்து கொள்வது மிகவும் விசேஷம். நேரில் வர முடியாதவர்களுக்கு ஹோமங்கள் செய்து பிரசாதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ஹோமங்களுக்கு பத்து நாள் முன்பே தெரிவிக்க வேண்டும். முன்பணமும் முக்கியம். ஹோமங்கள் நடைபெறும் நேரம் : காலை 9.00 மணி முதல் நண்பகல் : 12.30 மணி வரை ஆகும்.

அர்ச்சனை மற்றும் ஹோமங்களில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்களுடைய கோத்ரம், நட்சத்திரம், ராசி, பெயர் மற்றும் தெளிவான முகவரி முதலிய விவரங்களை தவறாமல் எழுதி அனுப்பவேண்டும். சங்கல்பத்திற்கு இது மிகவும் முக்கியம்.

**கட்டணம், Chennai Local Cheque / Draft / MO** மூலம் **Sree Mahalakshmi Yoha Peetam Charitable Trust** என்ற பெயரில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக

பீடம், **1/B,** முதல் மாடி, சி.எல்.சி. ஒர்க்ஸ் ரோடு, குரோம்பேட்டை, சென்னை-600 044. போன் : **94444 13521.**

இந்த அர்ச்சனை மற்றும் ஹோமங்களில் கலந்து கொள்பவர்களுக்கு கீழ்க்கண்டவைகளை தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

1. ஹோமப் பிரசாதங்கள் - ரக்ஷை, விபூதி, குங்குமம் அனுப்பி வைக்கப்படும்.
2. குருஜியின் அனுக்கிரஹத்துடன் கூடிய மந்த்ராட்சதை அனுப்பி வைக்கப்படும்.
3. வேண்டுபவர்களுக்கு உங்கள் நட்சத்திர அதி தேவதையின் கலர் படம் அனுப்பி வைக்கப்படும். இதில் அந்த நட்சத்திர அதி தேவதையின் மந்த்ரம் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது. ரூ.**100 extra.**

ஹோமங்கள் நடக்கும் தினத்தன்று நடக்கும் அன்னதானத்தில் தங்கள் பெயரிலும் அன்னதானம் சமஷ்டி முறையில் நடக்கும். இது பெரிய புண்ணியம் ஆகும் என்பது அனைவரும் அறிந்ததே. அன்னதானத்திற்கும், ஹோமங்களுக்கும் வேண்டிய பொருள்கள் மற்றும் பணம் மேற்குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கோ அல்லது ஹோமம் நடைபெறும் இடத்திற்கோ தங்களால் முடிந்ததை சேர்ப்பிக்கலாம்.

மேலும் விபரங்கள் தேவைப்பட்டால், செல் : **94444 13521** என்ற எண்ணுடன்ளள தொடர்பு கொள்ளவும் அல்லது கடிதம் எழுதவும். எல்லாவிதமான சந்தேகங்களுக்கும் விரிவான பதில் கிடைக்கும்.

என்றும் உங்கள் குடும்ப சுபிட்சத்திற்கு உதவும் சேவையில்,

**குருஜி டாக்டர் கல்யாணராம அய்யர்**

மேலும், உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரின் கீழ்க்கண்ட விபரங்களை தனித் தாளில் எழுதி அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

| உறவு முறை | பெயர் | கோத்ரம் | நட்சத்திரம் | ராசி | பிறந்த தேதி (ஆங்கிலம்) | முகவரி தொ.பேசி. எண். |
|---|---|---|---|---|---|---|
| குடும்பத் தலைவர் | | | | | | |
| மனைவி | | | | | | |
| தந்தை | | | | | | |
| தாயார் | | | | | | |
| மகன் | | | | | | |
| மகள் | | | | | | |
| மருமகன் | | | | | | |
| மருமகள் | | | | | | |
| பேரன் | | | | | | |
| பேத்தி | | | | | | |
| | | | | | | |

**ஸ்ரீ நட்சத்திர அதி தேவதைகளைப் பற்றி தெரிந்து கொள்வோம்.**

*ஸ்ரீ நட்சத்திர அதி தேவதை பூஜை மிகவும் முக்கியம். இந்த முக்கியத்துவத்தை இங்கு விபரமாக கொடுக்கிறோம்.இந்த பூஜையில் கீழ்க்கண்ட பலன்கள் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாகக் கிடைக்கும்.*

1. **ஆயுள் விருத்தி** - *ஆயுள் பலம் கூடும்.*

2. **ஆரோக்கிய விருத்தி** - *ஆரோக்கியம் கூடும்*

3. **சர்வாபீஷ்டப் பிராப்தி** - *மனதில் நினைக்கும் அனைத்து காரியங்களும் நிறைவேறும்.*

*நாம் தினமும் வீட்டில் பிரார்த்தனை செய்கின்றோம். கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்கின்றோம். ஒரு பொருளை மறதியாக எங்காவது வைத்துவிட்டு, கிடைக்காமல் தவிக்கும் பொழுது, விநாயக பகவானே, ஒரு ரூபாய் கற்பூரம் ஏற்றுகிறேன். எனக்கு இந்த பொருள் கிடைக்க வேண்டும், என வேண்டுகிறோம். வேலை கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். சீக்கிரமே பெண்ணிற்கு திருமணம் ஆக வேண்டும் என்று மனதார வேண்டுகிறோம். இப்படி பல பிரார்த்தனைகள்.*

*நாம் பிரார்த்தனை செய்யும் பொழுது உதட்டைக் கூட அசைப்பதில்லை. சத்தம் இல்லாமலும் பிரார்த்தனை செய்கின்றோம். இது எப்படி அந்த அந்த தெய்வத்திற்கு தெரிகின்றது; போய் சேருகின்றது; இதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.*

*மேலும், நம் குலதெய்வம், நம் இஷ்ட தெய்வம் நமக்கு எப்பொழுதும் அநுக்கிரகம் செய்கின்றது. உலகத்தில் உள்ள ஒவ்வொருவரையும் இந்த தெய்வங்கள் 24 மணி நேரமும் பார்த்துக் கொண்டிருக்கின்றது. மேலும், உதாரணமாக ஸ்ரீ சநீஸ்வர பகவான் உலகத்தில் உள்ள அனைவரையும் 24 மணி நேரமும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். சாதகமான பலன்கள் மற்றும் பாதகமான பலன்களை ஒவ்வொருவருக்கும் தருகின்றார். இது எப்படி சாத்யம் என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும்.*

*ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். செல்போன் இருக்கின்றது. நமக்கு என்றுளள ஒரு செல் எண் உள்ளது. இந்த செல்போன் மூலம் உலகில் உள்ள அனைத்து போன்களையும் நாம் தொடர்பு கொள்ள முடியும். அது போல் உலகத்தில் உள்ள அனைத்து போன்கள் மூலமும், நம்மை மற்றவர்கள் தொடர்பு கொள்ள முடியும்.*

*இந்த தொடர்புக்கு முக்கியம் நமக்கு ஒரு செல்போன் தேவை. அதையும் நாம் பத்திரமாக பார்த்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் நாம் அனைவரையும், அனைவரும் நம்மையும் தொடர்பு கொள்ள முடியும்.*

*நம் உடம்பில் ஆத்மா இருக்கிறது என்று அனைவருக்கும் தெரியும். ஆத்மா ஒவ்வொரு ஜன்மமாக, அதாவது, அந்த ஆத்மாவிற்கு மோட்சம் கிடைக்கும்வரை ஒவ்வொரு உடலாக மாறி மாறி செல்லும் என்பது அனைவரும் அறிந்ததே.*

*இந்த ஆத்மாவிற்குள் அந்தராத்மா (அந்தர ஆத்மா) என்ற ஒன்று உண்டு. ஆத்மாவுக்குள் இருக்கும் ஆத்மா என்று பெயர். அந்த அந்தராத்மாவில் இருப்பது தான் நட்சத்திர அதி தேவதை. அதுதான் நம்முடைய செல்போன் மாதிரி.*

*ஒவ்வொருவருக்கும் ஒரு ஜன்ம நட்சத்திரம் உண்டு. இதை பொதுவாக, ஜன்மம் முதல் மரணம் வரை உடலோடு சேர்ந்து இருக்கும் என்று சொல்வது. அதாவது ஒருவர் பிறந்த அடுத்த நிமிடத்தில் இருந்து இந்த நட்சத்திரம் அவர்களுடன் சேர்ந்துவிடும். இது மரணம் வரைதான். பின்பு அதாவது மரணத்திற்கு பின், திதி தான் ஒற்றிக் கொள்ளும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.*

*அதாவது மனிதனையும் அவனுடைய ஜன்ம நட்சத்திரத்தையும் அவருடைய மரணம் வரை பிரிக்க முடியாது. ஆனால், பெயர் அப்படி இல்லை. குழந்தை பிறந்த 11ஆம் நாள் தான் பெயர் வைக்கிறார்கள். பெயரையும் மாற்றிக் கொள்ள முடியும். ஜன்ம நட்சத்திரத்தை மாற்ற முடியாது.*

*27 நட்சத்திரத்திற்கும் அதி தேவதைகள் உண்டு. இதை பொதுவாக வசுக்கள் என்று சொல்லப்படுவது. நாம் அனைவரும் இந்தியர்கள். ஆனால் மொழிவாரியாக பேசுவதால், தமிழர், தெலுங்கர், கன்னடக்காரர் என்று சொல்வது போல, இந்த வசுக்களான நட்சத்திர அதிதேவதைகள்*

*தான் ஒவ்வொருவருடைய அந்தராத்மாவில் குடி கொண்டு இருக்கின்றது.*

*நாம் நினைக்கும் அனைத்தும், நினைத்த உடனேயே தெரிந்து கொள்வது இந்த வசுக்கள் என்ற நட்சத்திர அதி தேவதை. இது தான் நாம் நினைக்கும் பிரார்த்தனைகளை, அந்த அந்த தெய்வத்திற்கு கொண்டு செல்கின்றன. மேலும் அந்த அந்த தெய்வங்கள் கொடுக்கும் அநுக்கிரகத்தையும், சாதக, பாதகங்களையும் நமக்கு கொண்டு வந்து சேர்க்கின்றன. அதாவது நம்முடைய செல்போன் மாதிரி.*

*இந்த நட்சத்திர அதி தேவதையை நாம் ஆராதித்து வந்தால், இந்த* Transmitting *வேலையை அது சரியாக செய்யும். மேலும், முதலில் குறிப்பிட்ட முக்கியமான 3 பலன்களை இது செய்து கொடுக்கும்.*

1. *ஆயுள் விருத்தி*
2. *ஆரோக்கிய விருத்தி*
3. *சர்வாபீஷ்டப் பிராப்தி*

*இதுவும் எப்படி என்றால், ஆத்மா ஒவ்வொரு உடலாக மாறி மாறி செல்லும், மோட்சம் கிடைக்கும் வரை. ஆனால் ஒவ்வொரு உடலில் இருக்கும் பொழுதும் அந்த ஆத்மாவிற்கு வெவ்வேறு நட்சத்திரம் மற்றும் நட்சத்திர அதி தேவதை.*

*ஒரு உடலில் ஆத்மா இருக்கும்வரை தான் அந்த நட்சத்திர அதிதேவதை அந்த உடலுடன் இருக்கும். உடலுக்கு மரணம் ஏற்பட்டுவிட்டால், அந்த நட்சத்திர அதிதேவதையும் அந்த உடலில் உள்ள அந்தராத்மாவில் இருந்து பிரிந்துவிடும்.*

*நாம் நம்முடைய அந்தராத்மாவில் உள்ள நட்சத்திர அதிதேவதையை பூஜித்து வந்தால், இந்த உடல் நீண்ட ஆயுளுடனும், ஆரோக்கியத்துடனும் இருக்க அது வழி வகுத்துக் கொடுக்கும். அப்பொழுது தான், அதுவும் வந்த உடலில் குடியிருக்க முடியும் அல்லவா ?*

*மேலும், நாம் நினைக்கும் அனைத்து விஷயங்களையும் இந்த நட்சத்திர அதி தேவதை தெரிந்து கொள்ளும். நாம் இதனை சரியாக ஆராதனை செய்து வந்தால் அதாவது பூஜித்து வந்தால், நாம் நினைக்கும் பிரார்த்தனையை அந்த அந்த தெய்வத்திடம் உடனடியாக சேர்ப்பித்து, அந்த தெய்வத்தின் அனுக்கிரகத்தை நமக்கு கொண்டு வந்து சேர்க்கும்.*

**எவ்வளவு முக்கியமான வேலைகளை இந்த நட்சத்திர அதி தேவதைகள் செய்கின்றன என்பதை புரிந்து கொண்டு இருப்பீர்கள் என நினைக்கிறோம்.**

## பிறந்த நாள்

*மேலும், நாம் சில விஷயங்களை கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டும்.*

*நம்முடைய பிறந்த நாள் அன்று, அதாவது வருடத்திற்கு ஒரு முறை வரும் நட்சத்திரப்படி வரும் ஜன்ம நட்சத்திரத்தன்று, நம் உடலில் இருக்கும் நட்சத்திர அதி தேவதையும், அன்னம் (சாதம்) மற்றும் ஆஜ்யம் (நெய்) அக்னி மூலம் அதாவது ஹோமங்கள் மூலம் கிடைக்குமா என்று எதிர்ப் பார்க்குமாம்.*

*அதனால் தான் ஜன்ம நட்சத்திரத்தன்று அதாவது பிறந்த நாள் அன்று ஆயுஷ்ய ஹோமம், நவக்கிரக ஹோமம், நட்சத்திர ஹோமம் செய்து கொள்வது மரபாக இருக்கின்றது.*

*இது காலப்போக்கில் குறைந்து விட்டது. ஆனால் இதை நாம் தொடர்ச்சியாக செய்து வந்தால், நமக்கு மேற்சொன்ன எல்லா பலன்களும் நமக்கு கிடைக்கும்.*

*மேலும், சாஸ்திரங்கள் என்ன கூறுகின்றது என்றால், ஜன்ம நட்சத்திரங்களில் முக்கியமான காரியங்களான திருமணம், கிருஹப்பிரவேசம், பிரயாணம், மருந்துண்ணல், க்ஷவரம், கர்பாதானம் முதலிய செய்யக் கூடாது என்று சொல்கிறது.*

*மேலும், ஹோமங்கள், பூஜைகள், கோவிலுக்குச் செல்லுதல், போன்ற செயல்களை செய்து கொள்ளலாம் என்றிருக்கின்றது.*

*இதற்கான காரணங்கள், ஜன்ம நட்சத்திரத்தன்று, ஒவ்வொருவருடைய நாடித்துடிப்பும் B.P.யும் குறைந்த பட்சம் 10% ஆவது கூடும். இது மருத்துவ சோதனைகளின் மூலமும்*

நிரூபிக்கப்பட்டுள்ளது. அந்த நாட்களில் நாம் Tention உள்ள செயல்களை செய்தால் ஆரோக்கியத்திற்கும், ஆயுளுக்கும் நல்லதில்லை.Tentionகளை குறைக்கும், பூஜைகள், ஹோமங்கள், கோவிலுக்குச் செல்வது என்ற செய்கைகளை செய்து கொண்டால் நல்லது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றது.

**சங்கல்ப்பத்திற்கு நட்சத்திரம் மிகவும் முக்கியம்**

ஒவ்வொரு பூஜைக்கும் ஹோமத்திற்கும் சங்கல்ப்பம் மிகவும் முக்கியம். இந்த சங்கல்ப்பத்தில் நமது கோத்ரம், நட்சத்திரம், ராசி மற்றும் பெயரைச் சொல்லி நாம் செய்யும் பூஜை அல்லது ஹோமத்தின் மூலம் நமக்கு என்ன என்ன பலன்கள் தேவை என்பதையே கேட்பதாக அமையும்.

நாம் எந்த தெய்வத்திற்காக இந்த பூஜை அல்லது ஹோமத்தை செய்கிறோமோ அந்த தெய்வத்திற்கு நாம் இன்னார் என்று இந்த கோத்ரம், நட்சத்திரம், ராசி மற்றும் பெயர் மூலம் சரியாக தெரிவித்தால், அந்த தெய்வம் நமக்கு பலன்களை நேரிடையாகக் கொடுக்கும்.

## இது எப்படி என்று ஒரு உதாரணம் மூலம் பார்போம்

உங்களுக்கு சென்னை குரோம்பேட்டையில் ஒரு **Telephone Land Line** இருக்கிறன்றது என்று வைத்துக் கொள்வோம் இதனுடைய எண் **0044 2241 XXXX** என்று வைத்துக் கொள்வோம். இந்த எண்ணை உலகத்தில் உள்ள அனைத்து **Land Line** மற்றும் **Mobile phone** மூலம் தொடர்பு கொள்ளலாம் நாமும் இந்த **Telephone** மூலம் உலகத்தில் உள்ள அனைத்து **Land Line** மற்றும் **Mobile phone**களை தொடர்பு கொள்ள முடியும்.

## இது எப்படி சாத்யம் என்றும் பார்போம்.

00 என்பது **International code. 44** என்பது சென்னையின் **code.** 2 என்பது **BSNL**யை குறிக்கும். 241 என்பது குரோம்பேட்டை **Telephone Exchahge**யை குறிக்கும் . இறுதியில் இருக்கும் 4 எண்கள் உங்களுடைய வீட்டில் உள்ள **Landline** எண் ஆகும். இந்த 12 எண்கள் மூலம் எந்த நாட்டில் இருந்தும், யார் வேண்டுமானலும் நம்மை தொடர்பு கொண்டாலும், ஒரு நிமிடத்திற்குள் தொடர்பு கிடைக்கும். பேசலாம். அதே மாதிரி நம்முடைய இந்த **Telephone** மூலம் நாமும் உலகில் உள்ள அனைத்து **Telephone**களையும் தொடர்பு கொள்ளலாம். இதற்கு இந்த எண்களை சரியாக பயன்படுத்த வேண்டும் என்பது முக்கியம். இவை அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

அது போல், நாம் விரும்பும் தெய்வம் நமக்கு பலன்களை கொடுக்க நம்மை, நம்முடைய கோத்ரம், நட்சத்திரம், ராசி மற்றும் பெயர் மூலம் தெரிந்து கொள்ளும். இது எவ்வளவு சாத்யம் என்பதனையும் இப்பொழுது புரிந்து கொண்டு, பூஜையில் அல்லது ஹோமத்தில் ஆரம்பத்தில் சங்கல்ப்பத்தில் சொல்ல வேண்டியது எவ்வளவு முக்கியம் என்பதனையும் தெரிந்து கொண்டு இருப்பீர்கள்.

**மேலும், மற்றும் ஒரு முக்கியமான விஷயம்.** ஒருவர் பூஜை அல்லது ஹோமத்தின் பொழுது. தன்னுடைய கோத்ரம் , ராசி, மற்றும் பெயரைச் சொல்லி செய்து கொள்கிறோம். அதே சமயம், நாம் நம்மை சார்ந்தவர்களுக்காக, அவர்களுடைய கோத்ரம், நட்சத்திரம், ராசி மற்றும் பெயரை சொல்லியும் அதாவது அவர்களுக்காகவும் இந்த பூஜை அல்லது ஹோமத்தை செய்யலாம். இதில் இந்த சம்பந்தப்பட்ட நபர் நேரிலேயே கண்டிப்பாக இந்த பூஜையில் அல்லது ஹோமத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. இந்த நபர் வெளிநாட்டிலோ அல்லது இந்தியாவிலேயே வேறு எங்காவது இருந்தால் கூட, நாம் அவருடைய கோத்ரம், நட்சத்திரம், ராசி மற்றும் பெயர் சொல்லி செய்து கொண்டால் அந்த பூஜையின் அல்லது ஹோமத்தின் பலன்கள் நிச்சயமாக அவருக்கு போய் சேரும் என்று அனைத்து சாஸ்திரங்களும் சொல்கின்றன. இதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

ஒரு ஜாதகத்தில் நட்சத்திரம், ராசி, லக்னம், ஆகியவைகள் மிகவும் முக்கியம். ஒரு ஜாதகருக்கு பலன்கள் கூறும் பொழுது, அவர்களுக்கு இரண்டு விதமான அடிப்படைகளில் பலன்கள் சொல்லப்படும்.

**ஒன்று** - அவர் அவர்களுடைய நடப்பு தசா புக்தி, அதாவது, இப்பொழுது நடக்கும் தசையில் எந்த புக்தி நடைபெறுகின்றது. அதற்கு ஜாதக அடிப்படையில் என்ன என்ன பலன்கள் கிடைக்கின்றன என்று சொல்லப்படும். நட்சத்திரத்தின் அடிப்படையில் தான் ஆரம்ப கால தசை நிர்ணயிக்கப்படுகின்றது அதாவது இந்த நட்சத்திரத்தில் பிறந்தால் இந்த தசை முதலில் ஒருவருக்கு வரும் என்பதாகும்.

**இரண்டு** - *கோசார பலன்கள் என்பது தற்கால கிரக சஞ்சாரத்தினால் என்ன என்ன பலன்கள் ஜாதகருக்கு நடக்கும் என்பதைப் பற்றிச் சொல்லப்படுவது.*

*அதாவது, தற்காலத்தில் ஒவ்வொரு ஜாதகப்படி நட்சத்திரம் மற்றும் ராசிக்கு மற்ற கிரகங்கள் எங்கு இருக்கின்றது அதாவது, சூரியன் அங்காரகன், புதன், குரு , சுக்கிரன், சனி, ராகு மற்றும் கேது கிரகங்கள் சந்திரனிலிருந்து அதாவது நட்சத்திரம் இருக்கும் ராசியில் இருந்து எங்கு இருக்கின்றது என்ற அடிப்படையிலும் மற்றும் அதற்குண்டான என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்பதே ஆகும். ஆக, ஜோதிட பலன்களும் நட்சத்திர அடிப்படையிலேயேதான் கூறப்படுகின்றது.*

**மேலும் ஒரு முக்கியமான விஷயம்**

"**அகம் பிரம்மாஸ்மி**" *என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன அதாவது நாமே தெய்வம் என்றும் நம் உடலிலேயே தெய்வம் குடி கொண்டு இருக்கின்றது என்றும் அர்த்தமாகும். நம்முடைய ஆத்மாவில் நம்முடைய நட்சத்திர அதி தேவதை குடி கொண்டு இருக்கின்றது. இந்த நட்சத்திர அதி தேவதை தான் நாம் நினைக்கும் அனைத்தையும் தெரிந்துகொள்ளும். நம் பிரார்த்தனைகளை மற்ற தெய்வங்களுக்கு கொண்டு போய் சேர்க்கும். அந்த தெய்வங்கள் கொடுக்கும் பலன்களை நமக்கு கிடைக்கச் செய்யும். இதைப் பற்றி முன்பே விரிவாக பார்த்தோம்.*

*நம்முடைய உடலிலேயே இருக்கும் இந்த தெய்வத்தை நாம் ஆராதிக்க வேண்டும் என்பது அவ்வளவு முக்கியம். அதனால் தான் இதை* "**பரம ரகசியம்**" *என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.*

*நாம் மனசாட்சி என்று சொல்கிறோம். நாம் செய்யும் நல்லதும் கெட்டதும் நம்முடைய மனசுக்கும் மனசாட்சிக்கும் தெரியும் என்றும் சொல்கின்றோம். உன் மனசாட்சியைத் தொட்டு சொல் என்றும் சொல்கின்றோம். நம்முடைய மனசாட்சிக்கு பயந்து நடக்க வேண்டும் என்றும் சொல்கின்றோம். மனசாட்சி பேசுகிறது என்று சினிமாவிலும் காண்பிக்கின்றார்கள். ஆக, இந்த மனசாட்சிதான் மேலே சொன்ன இந்த நட்சத்திர அதிதேவதை ஆகும்.*

**மற்றும் ஒரு உதாரணம்**

*ஒரு மந்தரத்தை குரு மூலம் உபதேசம் பெற்று, ஜபம் செய்கிறோம். ஜபம் செய்யும் முறைகளில் கீழே கூறப்பட்டுள்ள 4 முறைகள் சொல்லப்பட்டுள்ளது.*

*1. ஜபம் செய்யும் மந்த்ரத்தை சப்தத்துடன் உச்சரிக்கும் பொழுது, கால் பங்கு பலன்கள் (* **25%***) தான் கிடைக்குமாம்*

*2. ஜபம் செய்யும் பொழுது சப்தம் வெளிவராமல் உதடுகள் மட்டும் அசைத்து சொல்லும் மந்த்ரங்களுக்கு அரை பங்கு (***50%***) பலன்கள் கிடைக்குமாம்.*

*3. ஜபம் செய்யும் பொழுது சப்தம் வெளிவராமலும், உதடுகளை அசைக்காமலும், மனதிற்குள்ளேயே ஜபம் செய்தால் அதற்கு முழு பங்கு பலன்கள் (***100%***) கிடைக்குமாம்.*

*4. ஜபம் செய்யும் பொழுது, சப்தம் வெளிவராமலும், உதடுகளும் அசையாமலும், மனதிற்குள்ளேயும், கண்களை மூடிக் கொண்டும் ஜபம் செய்தால் இரட்டிப்பு பலன்கள் (* **200%** *) கிடைக்குமாம்.*

*நாம் கதைகளில் படித்து இருக்கின்றோம். புராண கதைகள், இதிகாசங்களான ராமாயணம், மஹா பாரதம் போன்ற கதைகளையும் கேட்டு இருக்கின்றோம். தற்கால* **Cinema** *மற்றும்* **TV***களிலும் பார்க்கின்றோம். காட்டில் முனிவர்கள் கண்களை மூடிக் கொண்டு தவம் இருக்கின்றார்கள். மேற்சொன்ன* **200%** *பலன்கள் கிடைப்பதற்காகத்தான், முனிவர்கள் கண்களை மூடிக்கொண்டும், சப்தம் வெளிவராமலும், உதடுகளை அசைக்காமலும் ஜபம் செய்கின்றார்கள். அப்படிப்பட்ட வேத மஹரிஷிகளே, இன்றைய உலகத்துக்கு வேண்டிய பல*

விஷயங்களை ஞான திருஷ்டிகள் மூலம் தெரிந்து கொண்டு நமக்கு பல விஷயங்களை சொல்லி இருக்கிறார்கள்.

இது எப்படி சாத்யம் என்று பார்போமானல், எந்த ஒரு மஹரிஷியும் எந்த தெய்வத்தை நினைத்து ஜபம் செய்கின்றாறோ அந்த தெய்வத்திற்கு அவர் உடலில் உள்ள அதாவது அவரது ஆத்மாவில் உள்ள நட்சத்திர அதி தேவதை, அந்த தெய்வத்திற்கு அந்த ஜப பலன்களை எடுத்துச் செல்லும்

இதிலிருந்தும் நாம் நட்சத்திர அதி தேவதையின் அனுக்கிரகம் எவ்வளவு முக்கியம் என்பதும், நாம் அந்த நட்சத்திர அதி தேவதையை எப்படி மிகவும் நன்றாக ஆராதிக்க வேண்டும் என்றும் தெரிந்து கொண்டோம். **இதுவும் பரம ரகசியமாகும்.**

இதைத் தான் நம்முடைய வாசகர்களுக்கு நாம், தெளிவுபடுத்தி மந்த்ரத்தை உபதேசம் செய்து, அதனுடைய பலன்களை ஒவ்வொருவரும் பெற வேண்டும் என்று இந்த பெரிய முயற்சியை செய்து வருகின்றோம்.

**உபதேசம்**

முக்கியமான மந்த்ரங்கள், மூல மந்த்ரங்கள், காயத்ரி மந்த்ரங்கள் அனைத்தும் குரு மூலம் உபதேசம் பெற்றுக் கொண்டு, ஜபமும், பாராயணமும் செய்வதே சிறந்தது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இது அனைவருக்கும் தெரிந்ததே. உபதேசம் பெற்று இந்த மந்த்ரங்களை தினமும் குறைந்தது 21 முறை ஜபம் செய்தாலே எவ்வளவோ நல்ல பலன்கள் கிடைக்கும். 21 முறை இந்த மந்த்ரத்தை ஜபம் செய்ய 3 நிமிடங்கள் போதுமானதாகும்.

இந்த உண்மைகளை தெரிந்து கொண்டு, நடைமுறைபடுத்திக் கொள்வது பெரிய அதிர்ஷ்டமாகும். அந்த அதிர்ஷ்டத்தை தங்களுக்கு நாங்கள் ஏற்படுத்திக் கொடுக்க உள்ளோம் பயன் படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற்றம் அடையுங்கள். இந்த பலன்களால் நமக்கும், நம் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் சுப, சௌக்கிய, சௌகரிய, சௌபாக்கியம், தீர்க்க ஆயுள், நல்ல ஆரோக்யம் கிடைக்கும் என்பது உறுதி.

மேற் சொன்ன விஷயங்களில் இருந்து நம் நம்முடைய நட்சத்திரம் எவ்வளவு முக்கியம் என்பதனை தெரிந்து கொண்டு இருப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

மேற்சொன்ன எல்லா பலன்களும் உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், நாங்கள் இந்த நட்சத்திர ஹோமம் அதாவது நட்சத்திர அதிதேவதா ஹோமம் செய்கின்றோம்.

ஸ்ரீ நட்சத்திர அதி தேவதையின் மந்த்ரங்களைக் கீழே கொடுத்துள்ளோம். வேண்டுபவர்களுக்கு நட்சத்திர காயத்ரி மந்த்ரங்களையும் கொடுக்க உள்ளோம். வேண்டுபவர்கள் குருஜியை அணுகவும்.

**நம் ஸ்ரீ மகாலக்ஷ்மி யோக பீட ஹோம மண்டபத்தில் இந்த அனைத்து நட்சத்திர அதிதேவதைகளின் பஞ்சலோக விக்ரஹங்கள் (உற்சவமூர்த்தி) (ஒரு அடி உயரம்) மற்றும் கல் விக்ரஹங்களை (மூலவர் ) (3½ அடி உயரம்) வடித்து பூஜையில் வைத்து இருக்கின்றோம்.** அனைவரும் வந்து தரிசனம் செய்யவும்.

இப்பொழுது இந்த மூலவர் மற்றும் உற்சவ மூரத்தி விக்ரஹங்கள் நமது ஹோம மண்டபத்தில் இருக்கின்றது. இதற்கு என ஒவ்வொரு நட்சத்திர அதிதேவதைக்கும் இந்தப் புத்தகத்தில் காண்பித்து உள்ள மாதிரி படத்தில் உள்ளதுபோல் திருக்கோவிலும் கட்ட ஏற்பாடுகளும் செய்து கொண்டிருக்கிறோம். இதைப்பற்றிய மற்ற விபரங்களும் விபரமாகக் கொடுத்துள்ளோம்.

# ஸ்ரீ நட்சத்திர அதி தேவதைகளின் மந்த்ரங்கள்

**கிருத்திகை :**

அக்நயே நம : க்ருத்திகாப்ய: நம : அம்பாயை நம : துலாயை நம :
நிதத்ந்யை நம : ப்ரயந்த்யை நம : மேகயந்த்யை நம :
வர்ஷயந்த்யை நம : சுபுணீகாயை நம :

க்ருத்திகா நட்சத்திரே அதி தேவதா அக்நி தேவாய நம :
(நக்ஷத்ரம் : க்ருத்திகா. அதி தேவதை : அக்நி)

**ரோஹிணீ**

ப்ரஜாபதயே நம : ரோஹிண்யை நம :
ரோசமாநாயை நம : ப்ரஜாப்ய : நம :

ரோஹிணீ நட்சத்திரே அதி தேவதா ப்ரஜாபதயே நம :
(நக்ஷத்ரம் : ரோஹிணி. அதி தேவதை : ப்ரஜாபதி)

**ம்ருகசீர்ஷம்**

ஸோமாய நம : ம்ருகசீர்ஷாய நம : இந்வகாப்ய: நம :
ஔஷதீப்ய: நம : ராஜ்யாய நம : அபிஜித்யை நம :

ம்ருகசிரஷ நட்சத்திரே அதி தேவதா ஸோமாய நம :
(நக்ஷத்ரம் : ம்ருகசீர்ஷம். அதி தேவதை : ஸோம)

**திருவாதிரை (ஆருத்ரா)**

ருத்ராய நம : ஆர்த்ராயை நம :
பிந்வமாநாயை நம : பசுப்ய: நம :

ஆருத்ரா நட்சத்திரே அதி தேவதா ஸ்ரீ ருத்ராய நம :
(நக்ஷத்ரம்:ஆருத்ரா (திருவாதிரை). அதி தேவதை:ஸ்ரீருத்ர)

**புனர்பூசம் (புனர்வஸு)**

அதித்யை நம : புநர்வஸூப்யாம் நம :
பூத்யை நம : ப்ரஜாத்யை நம :

புனர்வஸூ நட்சத்திரே அதி தேவதா அதிதி தேவாய நம :
(நக்ஷத்ரம் : புனர்வஸூ (புனர்பூசம்). அதி தேவதை : அதிதி)

**பூசம் (புஷ்யம்)**

ப்ருஹஸ்பதயே நம : திஷ்யாய நம : ப்ரஹ்மவர்ச்சஸாய நம :

புஷ்ய நட்சத்திரே அதி தேவதா ப்ருஹஸ்பதயே நம :
(நக்ஷத்ரம் : புஷ்யம் (பூசம்). அதி தேவதை : ப்ருஹஸ்பதி)

**ஆயில்யம் (ஆஸ்ரேஷா)**

ஸர்ப்பேப்ய: நம : ஆஸ்ரேஷாப்ய: நம :
தந்தஸூகேப்ய: நம :

ஆஸ்ரேஷா நட்சத்திரே அதி தேவதா ஸர்ப்பாய நம :
(நக்ஷத்ரம் : ஆஸ்ரேஷா (ஆயில்யம்). அதி தேவதை :ஸர்ப்பா)

**மகம்**

பித்ருப்ய: நம : மகாப்ய: நம : நகாப்ய: நம :
அகதாப்ய: நம : அருந்ததீப்ய: நம :

மகா நட்சத்திரே அதி தேவதா பிதர தேவாய நம :
(நக்ஷத்ரம் : மகம். அதி தேவதை : பிதர)

**பூரம் (பூர்வபல்குநி)**

அர்யம்ணே நம : பல்குநீதப்யாகும் நம : பசுப்ய: நம :

பூர்வபல்குநி நட்சத்திரே அதி தேவதா அர்யமா தேவதாய நம :
(நக்ஷத்ரம் : பூர்வபல்குநி (பூரம்). அதி தேவதை : அர்யமா)

**உத்திரம் (உத்ரபல்குநி)**

பகாய நம : பல்குநீப்யாகும் நம : ஸ்ரேஷ்ட்யாய நம :

உத்ரபல்குநி நட்சத்திரே அதி தேவதா பகாய நம :
(நக்ஷத்ரம் : உத்ரபல்குநி (உத்திரம்). அதி தேவதை : பக)

**ஹஸ்தம்**

ஸவித்ரே நம : ஹஸ்தாய நம : தததே நம :
ப்ருணதே நம : ப்ரயச்சதே நம : ப்ரதிக்ருப்ணதே நம :

ஹஸ்தா நட்சத்திரே அதி தேவதா ஸவிதா தேவதாய நம :
(நக்ஷத்ரம் : ஹஸ்தம். அதி தேவதை : ஸவிதா)

**சித்திரை (சித்ரா)**

த்வஷ்ட்ரே நம : சித்ராயை நம :

சைத்ராய நம : ப்ரஜாயை நம :

சித்ரா நட்சத்திரே அதி தேவதா த்வஷ்டா தேவதாய நம :

(நக்ஷத்ரம் : சித்ரா (சித்திரை). அதி தேவதை : த்வஷ்டா)

**சுவாதி**

வாயவே நம : நிஷ்டயாயை நம :

காமசாராய நம : அபிஜித்யை : நம :

சுவாதி நட்சத்திரே அதி தேவதா வாயு தேவாய நம :

(நக்ஷத்ரம் : ச்வாதீ (சுவாதி). அதி தேவதை : வாயு)

**விசாகம்**

இந்த்ராக்நிப்யாகும் நம : விஸாகாப்யாகும் நம :

ஸ்ரேஷ்ட்யாய நம : அபிஜித்யை நம :

விசாக நட்சத்திரே அதி தேவதா இந்த்ராக்நீ தேவாய நம :

(நக்ஷத்ரம் : விசாகம். அதி தேவதை : இந்த்ராக்நீ)

**அனுஷம் (அனுராதா)**

மித்ராய நம : அநூராதேப்ய: நம : மித்ரதேயாய நம :

அபிஜித்யை நம :

அனுராதா நட்சத்திரே அதி தேவதா மித்ர தேவாய நம :)

(நக்ஷத்ரம் : அனுராதா (அனுஷம்). அதி தேவதை : மித்ர)

**கேட்டை :**

இந்த்ராய நம : ஜ்யேஷ்டாயை நம :

ஜ்யைஷ்ட்யாய நம : அபிஜித்யை நம :

ஜ்யேஷ்டா நட்சத்திரே, அதி தேவதா இந்திராய நம :

(நக்ஷத்ரம் : ஜ்யேஷ்டா (கேட்டை). அதி தேவதை:இந்திரன்)

**மூலம்**

ப்ரஜாபதயே நம : மூலாய நம : ப்ரஜாயை நம :

மூலா நட்சத்திரே அதி தேவதா ப்ரஜாபதயே நம :

(நக்ஷத்ரம் : மூலம். அதி தேவதை : ப்ரஜாபதி)

**பூராடம் (பூர்வாஷாடா)**

அத்ப்ய நம : ஆஷாடாப்ய: நம : ஸமுத்ராய நம :

காமாய நம: அபிஜித்யை நம :

பூர்வஷாடா நட்சத்திரே அதி தேவதா ஆப தேவதாய நம :

(நக்ஷத்ரம் : புர்வாஷாடா (பூராடம்). அதி தேவதை : ஆப)

**உத்தராடம் (உத்தராஷாடா)**

விஸ்வேப்யோ தேவேப்ய: நம : ஆஷாடாப்ய: நம :

அநபஜய்யாய நம : ஜித்யை நம :

உத்ராஷாடா நட்சத்திரே அதி தேவதா விச்வே தேவாய நம :

(நக்ஷத்ரம் : உத்தராஷாடா (உத்தராடம்). அதி தேவதை : விச்வே தேவா)

**திருவோணம் (சரவணம்)**

விஷ்ணவே நம : ஸ்ரோணாயை நம :

ஸ்லோகாய நம : ஸ்ருதாய நம :

ச்ரவண நட்சத்திரே அதி தேவதா விஷ்ணவே நம :

(நக்ஷத்ரம் : சரவண (திருவோணம்). அதி தேவதை : விஷ்ணு)

**அவிட்டம் (ச்ரவிஷ்டா)**

வஸுப்ய: நம : ஸ்ரவிஷ்டாப்ய: நம : அக்ராய நம : பரீத்யை நம :

ச்ரவிஷ்டா நட்சத்திரே அதி தேவதா வஸவ தேவாய நம :

(நக்ஷத்ரம் : ச்ரவிஷ்டா (அவிட்டம்). அதி தேவதை : வஸவ)

**சதயம் (சதபிஷக்)**

வருணாய நம : ஸதபிஷஜே நம : பேஷஜேப்ய: நம :

சதபிஷக் நட்சத்திரே அதி தேவதா வருணாய நம :

(நக்ஷத்ரம் : சதபிஷக் (சதயம்). அதி தேவதை : வருண)

**பூரட்டாதி (பூர்வப்ரோஷ்டபதா)**

அஜாயை கபதே நம : ப்ரோஷ்டபதேப்ய: நம :

தேஜஸே நம : ப்ரஹ்மவர்ச்சஸாய நம :

பூர்வப்ரோஷ்டபதா நட்சத்திரே அதி தேவதா அஜஏகபாத தேவாய நம :)
(நக்ஷத்ரம் : பூர்வப்ரோஷ்டபதா (பூரட்டாதி) அதி தேவதை : அஜஏகபாத)

**உத்திரட்டாதி (உத்தரப்ரோஷ்டபதா)**

அஹயே புத்நியாய நம : ப்ரோஷ்டபதேப்ய: நம :
ப்ரதிஷ்டாயை நம :

உத்தரப்ரோஷ்டபதா நட்சத்திரே அதி தேவதா அஹிர்புத்ந்ய தேவாய நம :
(நக்ஷத்ரம் : உத்தரப்ரோஷ்டபதா (உத்திரட்டாதி. தேவதை : அஹிர்புத்ந்ய)

**ரேவதீ**

பூஷ்ணே நம : ரேவத்யை நம : பஸூப்ய: நம :

ரேவதி நட்சத்திரே அதி தேவதா பூஷாய நம :
(நக்ஷத்ரம் : ரேவதீ. அதி தேவதை : பூஷா :)

**அச்விநீ**


அஸ்விப்யாகும் நம : அஸ்வயுக்ப்யாகும் நம :
ஸ்ரோத்ராய நம : ஸ்ருத்யை நம :

அச்விநீ நட்சத்திரே அதி தேவதா அச்வநீ தேவதாய நம :
(நக்ஷத்ரம் : அச்விநீ. அதி தேவதை : அச்விநீ)

**பரணி (அபபரணி)**

யமாய நம : அபபரணீப்ய: நம :
ராஜ்யாய நம : அபிஜித்யை நம :

அபபரணீ நட்சத்திரே அதி தேவதா யமாய நம :
(நக்ஷத்ரம் : அபபரணீ (பரணி). அதி தேவதை : யம)



**ஸ்ரீ நட்சத்திர அதி தேவதையின் திருக்கோவில் மாதிரிப் படம்**

# ஸ்ரீ நட்சத்திர அதி தேவதைகள் திருக்கோவில்கள்

நம்முடைய ஸ்ரீ மகாலக்ஷ்மி யோக பீட ஹோம மண்டபத்தில் 27 நட்சத்திர அதி தேவதைகளின் மூலவர்களான கல் விக்ரஹங்களும் **(ஒவ்வொன்றும் 3½ அடி உயரம்)**, உற்சவ மூர்த்திகளான பஞ்ச லோக விக்ரஹங்களும் **(ஒவ்வொன்றும் ஒரு அடி உயரம்)** உள்ளன.

உற்சவ மூர்த்திகளுக்கு தினமும் பூஜைகளும், வேண்டிய பொழுது ஹோமங்களும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. கல் விக்ரஹங்களுக்கு இனிமேல்தான் ஜல வாசம், தான்ய வாசம், கண் திறத்தல், அஷ்டா தச கிரியைகள் ஆகியவைகள் செய்ய வேண்டும். தற்பொழுது, இந்த ஒவ்வொரு நட்சத்திர அதிதேவதைகளுக்கும் தனித்தனியாக மாதிரிப் படத்தில் உள்ளபடி கோயில் கட்ட ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கின்றது. கோவில் கட்டிய உடன் கும்பாபிஷேகமும், பிரதிஷ்டையும் செய்ய உள்ளோம்.

இந்த நட்சத்திர அதிதேவதைகளின் முக்கியத்துவத்தை, இந்த புத்தகத்தில் மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும் கொடுத்து உள்ளோம். அப்படிப்பட்ட இந்த கோயில்களை நாம் அனைவரும் முயற்சி எடுத்து கட்டி முடித்து கும்பாபிஷேகம் செய்வோம். கோவில்கள் கட்ட பூர்வ புண்யமும் அதிர்ஷ்டமும் நிச்சயமாக வேண்டும்.

கோவில்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டால், பல நூறு வருடங்கள் மிகவும் சிறப்பாக இருந்து, பல சந்ததிகளுக்கு நல்ல பலன்களை கொடுக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

இந்து மத சம்பிரதாயம், குல விருத்தி, குடும்ப விருத்தி, புத்ர விருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி என்று நம்முடைய குலம் வளர்வதற்காக முக்கியத்துவம் கொடுத்து, பல புண்ய காரியங்களை செய்யச் சொல்கிறது. பல புண்ய பலன்களில், ஒரு கோவில் கட்டினாலோ அல்லது கோவில் கட்ட உதவிகள் செய்தாலோ, மேற்சொன்ன எல்லா புண்ய பலன்களும் நம்முடைய சந்ததிகளுக்கு அதாவது மகன், பேரன், கொள்ளு பேரன், எள்ளு பேரன் என்ற அனைவருக்கும் கிடைக்கும் என்று எல்லா சாஸ்திரங்களும் கூறுகின்றன.

திருக்கோவில்கள் கட்டுவதன் பலன்களை பற்றி அக்னி புராணத்திலும், விஷ்ணு புராணத்திலும் கூறப்பட்ட விசேஷமான பலன்களை கீழேக் கொடுக்கின்றோம் :-

இறைவனுக்கு ஆலயம் எழுப்புபவன் முற் பிறவிகளில் செய்த பாவங்களிலிருந்து விடுபடுகின்றான். ஆலயம் எழுப்ப நினைத்தாலே பாவ விமோசனம் உண்டு. ஆலயம் எழுப்புவதனால் தன் வம்சத்தில் தனக்கு முன் தோன்றியவர்கள், பின் தோன்றுபவர்கள் ஆகிய அனைவரும் விஷ்ணு லோகம் அடைவர். பிரம்ம ஹத்தி பாவம் விலகும். புண்ய தீர்த்தங்களில் நீராடிய பலன்கள் கிடைக்கும்.

ஓர் ஆலயம் எழுப்பினால் சொர்க்கம். மூன்று எழுப்பினால் பிரம்ம லோகம், ஐந்துக்கு கைலாயம், எட்டு எழுப்பினால் வைகுந்தம் அடைவர். சகல சௌபாக்கியங்களுடன் வாழ்ந்து பிறவாப் பேரின்பம் அடைவர். தான் ஈட்டிய பொருளில் ஒரு பகுதியைக் கொண்டாவது கோயில் எழுப்ப வேண்டும். செல்வத்தை ஆலயம் எழுப்புவதில் செலவு செய்பவன் வைகுந்தம் அடைகிறான். அவனுக்கு மறுபிறவி இல்லை.

நாம் 27 நட்சத்திர அதிதேவதைகளுக்கும் 27 திருக்கோயில்கள் கட்ட உள்ளோம். நம் அனைவருக்கும் எவ்வளவு பலன்கள் கிடைக்கும் என்று நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

**ஒரு கோயில் கட்டும் செலவுகளை கீழேக் கொடுக்கின்றோம் :-**

கோவில் 8 அடி நீளம் 8 அடி அகலம் உள் கூடு அமைந்ததாகவும். ஏக தள கோபுரமும் அர்த்த மண்டபத்துடன் அமைய உள்ளது.

| | |
|---|---|
| செங்கல் 15000 | ரூ. **75,000** |
| மணல் 3 லோடு | ரூ. **30,000** |
| ஜல்லி + கருங்கல் | ரூ. **40,000** |
| சிமெண்ட் 150 மூட்டை | ரூ. **45,000** |
| கம்பிகள் 700 கிலோ | ரூ. **35,000** |
| லேபர் மற்றும் இதர செலவுகள் | ரூ. **3,25,000** |
| இடம் | ரூ. **2,00,000** |
| தோராயமாக | **ரூ. 7,50,000** |

ஒரு நட்சத்திர அதி தேவதை கோயில் கட்ட தோராயமாக **ரூ. 7,50,000** ஆகும். இதை நம்முடைய ஆன்மீக தர்மவான்கள் மூலம் கைங்கர்யமாக பெறலாம் என்று நினைக்கின்றோம். முடிந்தவர்கள் கீழேக் கொடுக்கப்பட்ட ஏதாவது ஒரு வகையில் பங்கேற்கலாம்.

1. தங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் **ரூ.1000** வீதம் அதாவது உங்கள் நட்சத்திர கோயில்களுக்கு தாங்கள் பங்கேற்கும் கைங்கர்யம்.

2. ஒரு கோவிலுக்கு தேவைப்படும் மொத்த பொருளோ அல்லது தங்களால் முடிந்த அளவோ அல்லது ஒரு பொருளுக்கு அதாவது சிமெண்ட், செங்கல், கம்பி போன்றவைகளுக்கோ பணமாக அனுப்பலாம்.
3. 27 கோவில்களுக்கும் தங்களால் முடிந்த அளவு உதாரணமாக **ரூ.1000** வீதம் **ரூ.27000** அல்லது அதற்குமேல் தங்களால் முடிந்த அளவு.
4. ஒரு கோவிலின் மொத்த செலவையும் கூட ஏற்கலாம்.
5. தங்கள் நண்பர்கள் உறவினர்கள் மூலமும் இந்த கைங்கர்யத்தை செய்யலாம்.
6. தங்களால் முடிந்த கைங்கர்யம் மிகவும் குறைவாகவும் இருக்கலாம், மிகவும் அதிகமாகவும் இருக்கலாம். அதாவது தங்களுடைய சக்திக்கேற்றவாறு பங்கேற்கலாம்.
7. வேறு ஏதாவது விஷயங்கள் தேவைப்பட்டால் குருஜியை தொடர்பு கொள்ளவும். மேலும் ஒரு வேண்டுகோள்; இந்த அதி அற்புதமான திருக்கோவில்கள் அமைக்க நமக்கு பகவான் பெரும் பாக்கியத்தைக் கொடுத்து உள்ளான். அதை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நமது கடமை. இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்வோம். அதனால் தங்களால் முடிந்த கைங்கர்யங்கள் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் அனுப்ப நினைக்கும் தொகையை Chennai Local Cheque / DD/ MO மூலம் Sree Mahalakshmi Yoha Peetam Charitable Trust என்ற பெயரில் கீழ்க்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். **ஸ்ரீ மஹா லக்ஷ்மி யோக பீடம், அலுவலகம் : 1/B,** முதல் மாடி, சி.எல்.சி. ஒர்க்ஸ் ரோடு, குரோம்பேட்டை, சென்னை - 44. செல் : 94444 13521, போன் : 044-2241 5152

என்றும் உங்கள் குடும்ப சுபிட்சத்திற்கு உதவும் சேவையில்,

**குருஜி டாக்டர் கல்யாணராம அய்யர்**

## அன்பார்ந்த வாசகர்களுக்கு மற்றும் ஒரு விண்ணப்பம்

இந்த விசேஷமான புத்தகத்தில் எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொண்டு இருப்பீர்கள். இதை அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்றும், நம்முடைய இந்து மத சம்ப்ரதாயத்தில் எவ்வளவு அருமையான விஷயங்கள் இருக்கின்றன என்றும், முடிந்தவரை அனைவருக்கும் இந்த விஷயங்கள் போய் சேர வேண்டும் என்றும் நினைக்கின்றோம். அதனால் உங்களிடம் மற்றும் ஒரு விண்ணப்பம், உங்களுடைய நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள், நன்றாக தெரிந்தவர்கள் ஆகியோருடைய முகவரியை எங்களுக்கு தெரியப்படுத்தினால், அவர்களுக்கு இந்தப் புத்தகத்தை இலவசமாக அனுப்பலாம் என்றிருக்கின்றோம். அதனால் முடிந்தவரை 10 முகவரிக்கு குறையாமல் எங்களுக்கு எழுதி அனுப்பவும். முகவரியை தெளிவாக எழுதி அனுப்பவும்.

“தர்மத்தை நாம் ரட்சித்தால், தர்மம் நம்மையும் நம் சந்ததியினரையும் காப்பாற்றும்” என்பது வேதவாக்கு. நம்மால் முடிந்தவரை தர்மத்தைச் செய்வோம். பலருக்கும் உபயோகமாக இருப்போம்.

**குருஜி கல்யாணராம அய்யர்**








அசுவிநி

பரணி

கிருத்திகை








ரோகிணி

மிருகசீரிஷம்

திருவாதிரை







புனர்பூசம்

பூசம்


ஆயில்யம்



மகம்



பூரம்




உத்திரம்



ஹஸ்தம்



சித்திரை




சுவாதி



விசாகம்



அனுஷம்



கேட்டை







மூலம்

பூராடம்

உத்திராடம்







திருவோணம்

அவிட்டம்

சதயம்







பூரட்டாதி

உத்திரட்டாதி

ரேவதி

**பிற்சேர்க்கை ஒன்று**

**ஸ்ரீ வைஸ்வாநரக்னி பிராயச்சித்த ஹோமம்**

ஸ்ரீ வைஸ்வாநரக்னி பிராயச்சித்த ஹோமத்தின் முக்கிய சாரத்தை இங்கே கொடுக்கிறோம். இதை அனைவரும் ஒருமுறைக்கு இரு முறை படித்து தெரிந்து கொள்ள வேண்டியது.

இந்த ஹோமத்தில் அக்னி பகவானை பிரார்தித்து அக்னிமூலமாக அஹுதிகள் கொடுக்கப்படுகின்றன.

-ஹே அக்நி தேவனே!

உங்களுக்கு கோபம் தரக்கூடிய செய்கைகளை செய்த பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீர்களாக. ஜீவனத்திற்காக பொய் சொன்ன பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக.

யக்ஞங்களில் நேர்ந்த குறைபாடுகளால் ஏற்பட்ட பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக. யக்யம் சம்பந்தப்படாத வேறு கர்மாக்களில் நேர்ந்த குறைபாடுகளால் ஏற்பட்ட பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பீராக.

உறவினர்கள் மற்றும் நண்பர்களின் புகழ்ச்சியால் கர்வம் கொண்டு, தேவர்களுக்கு அபசாரங்கள் இழைத்த பாபங்களிலிருந்து என்னை விடுவிப்பாயாக. என்னை கடன்களிலிருந்து விடுவிப்பாயாக. நான் கருவில் இருந்த காலத்தில் என் தாய்-தந்தையரால் இழைக்கப்பட்ட பாபங்களின் தாக்கத்திலிருந்து என்னை விடுவிப்பாயாக.

நான் அறியாப்பருவத்தில் என் தாய் - தந்தையருக்கு இழைத்த ஹிம்ஸைகளால் விளைந்த பாபங்களிலிருந்து என்னை கரையேற்றுவாயாக.

என் பெற்றோருக்கு மனக் கஷ்டங்கள் ஏற்படுத்திய பாபங்களிலிருந்து என்னை விடுதலை அளிப்பாயாக. என் புத்திரன் முதாலனோரோடு கூடி நான் இழைத்த அனைத்துப் பாபங்களிலிருந்தும் எனக்கும் விமோசனம் அளிப்பாயாக.

அறிஞர்கள் அவையில் நான் செய்திருக்கக்கூடிய பிழைகளால் நேர்ந்த பாபங்களை அகற்றி என்னைப் புண்ணிய லோகம் சேர்ப்பாயாக. எக்காலத்தும் நான் செய்த பாபங்களிலிருந்து என்னைச் சுத்தம் செய்வாயாக, இங்கு வந்து எனக்கு தீர்க்காயுள் அருள்வாயாக. என் விரோதிகளிடமிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக.

என் குழந்தைகளைக் காப்பாற்ற இயலாது அவர்களுக்கு கடன்பட்டிருந்தால், கடனாக வாங்கிய முதலை சாப்பிட்டுவிட்டுத் திருப்பித்தர இயலாதவனாக இருந்திருந்தால், அவ்வாறு பட்ட கடன்களிலிருந்து என்னைப் காப்பாற்றுவாயாக.

நான் திருடியிருந்தால், பார்க்கத் தகாதவற்றைப் பார்த்திருந்தால், அத்தகைய பாபங்களிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக. சுருக்கமாக அல்லது விஸ்தாரமாக மற்றவர் மீது பழி சுமத்துதல், பிறரை ஹிம்ஸித்தல், கோள் சொல்லுதல் போன்ற யக்ஷ்மாதி ரோகங்களுக்குக் காரணமான பாபங்களை என்னிடமிருந்து அகற்றுவீர்களாக.

ரோகத்தை ஏற்படுத்தும் பாபங்களையும், அலக்ஷ்மீகரத்தையும் அகற்றிக் கொள்ள அருள்வீராக. இந்த கர்மாவினால் நாங்கள் பாபங்கள் நீக்கப்பட்டவராய், மங்களங்கள் சேரப்பெறறவராய் அழகுள்ளவராய் ஆக அருள்வீர்.

எங்களுக்கு நிறைந்த செல்வத்தை அருளி, கொஞ்ச நஞ்சமுள்ள பாபங்களையும் களைந்து, எங்களைப் புனிதனாக்குவீராக. எங்கள் எதிரிகளை அகற்றும், எங்களுக்கு சுகங்களை அருளும்.

எனக்கு தீங்கு நினைக்கும், விளைவிக்கும் எதிரிகளைத் தீயிலிட்ட கட்டைகளாக்குவீராக. என்னை வெறுக்கும், நான் வெறுக்கும், எதிரிகளைச் சாம்பலாக்குவீராக.

நான் கொடுத்த செல்வத்ததைத் திருப்பாதவன், என் செயல்களுக்கு இடையூறு விளைவிப்பவன், என்னை நிந்திப்பவன், என்னைக் கொல்ல நினைப்பவன் ஆகிய நால்வகை எதிரிகளையும் அழித்திடுவீராக. என்னைச் சார்ந்தவர்களது அழகு, பலம் போன்றவை மேன்மை அடைய அருள்வீராக.

நீயும் உன்னைச் சார்ந்தவர்களும், உன் கடாஷமும் திரும்பத்திரும்ப என்னைச் சுற்றி வந்து,

எனக்கு லஷக்கணக்கான செல்வத்தையும் என்னிடம் முன்னால் இல்லாத செல்வத்தையும் சம்பாதித்துக் கொடுப்பாயாக.

புண்ய லோகத்தில் உள்ளவர்கள் ஸுஹ்ருதம் உள்ளவர்கள், சந்தோஷம் மிக்கவர்கள், ரோகமற்றவர்கள், பிறரால் வஞ்சிக்கப் படாதவர்கள். தங்கள் ஸந்ததியினரைப் பார்த்த வண்ணம் அருள் செய்பவர்கள். அத்தகைய புண்ய லோகம் எனக்கு கிடைக்கட்டும்.

எந்தெந்த பாபத்திற்கு என்னென்ன பிராயச்சித்தம் என்பதை நீ அறிவாய். எனவே, உன்னை பிரார்த்திக்கிறேன். இப்பிறவியிலும், முற்பிறவியிலும் மனம் வாக்கு காயங்களால் நான் செய்துள்ள அனைத்துப் பாபங்களிலிருந்தும் என்னை விடுவிப்பாயாக.

மேலும் மாத்ரு சாபம், பித்ரு சாபம், குரு சாபம், குல தெய்வ சாபம், இஷ்ட தெய்வ சாபம், கிரஹதேவதா சாபம், கிராம தேவதா சாபம் இவையெல்லாம் நிவர்த்தியாகட்டும். மேலும், நான் தண்ணீர் பூமி, வாயு, அக்னி, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களுக்கு செய்த அபச்சாரங்களை இந்த ஹோமம் நிவர்த்தி செய்யட்டும். என் வாழ்க்கையில் ஏற்படும் கண்டங்களை தாண்டி வரச் செய்யட்டும்.

(மேலும், இந்த ஹோம முடிவில் புரோகிதர் அக்னி பகவானை வேண்டும் மந்திரத்தின் அர்த்தமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.)

ஹே அக்னி பகவானே! என் எஜமானனுக்கு தீர்க்காயுளும், பலமும் அளிப்பாயாக.

ஹே வருணனே! எஜமானன் மீண்டும் நிறைந்த பலம் அடையச் செய்வாயாக.

ஹே, அதிதி தேவதையே! தாயைப்போல தாயைப் போல அவருக்கு ஹிதம் அளிப்பாயாக.

ஹே விஸ்வே தேவர்களே அவர் முதுமைக் காலம் வரை வாழ

அருள்வீராக.

ஹே எஜமான தம்பதிகளே அக்னியில் ஆஜ்ய ஆஹுதிகள் அளித்து கர்மானஷ்டானங்களைத் தொடங்கியுள்ளீர்கள். இதைத் தொடருங்கள். ஒருவருக்கொருவர் இணைபிரியாதிருங்கள். உங்கள் கர்மானுஷ்டானங்கள் உங்கள் கோத்ரம் (குடும்பம்) முழுவதற்கும் பலனளிப்பதாக உள்ளதென்பதை மறவாதீர்கள்.

# பிற் சேர்க்கை "மூன்று"

**சமக பாராயண பலன்கள் :-**

"அக்னியும், விஷ்ணுவும் ஆகியவர்களே: எங்களிடம் ஒருமித்து அன்பு கனியும் மனமுடையவர்களாக நீங்களிருவரும் இருக்க வேண்டும். உங்களை துதிக்கும் இவ் வார்த்தைகள் செழிக்க வேண்டும். நீங்களிருவரும் ஸகல ஐசுவர்யங்களுடன் உணவுப் பொருட்களுடனும் எங்களை அனுக்ரஹிக்க எழுந்தருள வேண்டும்."

"அன்ன பானங்கள் பகவானை ஆராதிக்கும் என்னிடம் என்றும் உள்ளன. அன்னமிடும் மனதும், பரிசுத்தமும், உத்ஸாஹமும், அன்ன ரஷணமும், அன்னத்தை சம்பாதிக்கும் யாகமும், யாகத்தில் ஸ்வரத்துடன் மந்திரங்களை உச்சரிக்கும் சக்தியும், புகழும், சொல்லுந்திறமையும், கேள்வித்திறமையும், உள்ளொளியும், ஸ்வர்க்கமும், பிராணனும், உயிரும், சித்தமும் சித்தத்தால் அறியப்படும் பொருளும், வாக்கும், மனதும், கண்ணும், காதும், ஞானேந்திரியங்களின் சக்தியும், கர்மேந்திரியங்களின் சக்தியும், பிராண சக்தியும், சத்துருக்களை வெல்லும் திறமையும், ஆயுளும், முதுமையும், அந்தராத்மாவும், நல்ல உடலும், சுகமும், உடலைக் காக்கும் கவசம் முதலியனவும், திடமான உறுப்புகளும், எலும்புகளும், கண்களும், இன்னும் உடலிலுள்ள எல்லா அவையங்களும் திடமாக ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்கு உள்ளன.

மேன்மையும், தலைமையும், ஆழங்கான முடியாத மனமும், இனிமையான குளிர்ந்த ஜலமும், வெற்றித் திறமையும், வெற்றிப் பெருமையும், வீடு, நிலம் முதலிய செல்வமும், புத்திர பௌத்திரர்களும், அழியாத சந்ததியும், செல்வப்பெருக்கும், வித்தையின் வளர்ச்சியின் உண்மையும், நன்னம்பிகையும், ஸ்தான, ஜங்கமப் பொருள்களும், தனமும், வசீகரண சக்தியும், சரீர காந்தியும், ஆடல், பாடல்களும், அதனால் வரும் களிப்பும், உண்டானதும், உண்டாகப்போவதும், தேவதைகளின் ஸ்துதியும், புண்ணியமும், சேமித்த பொருளும், இனி கிடைக்கக் கூடிய பொருளும், சேமித்த நிலம் முதலிய சொத்தும், இனி வரப்போகும் நிலம் முதலிய சொத்தும், நல்ல வழியும், கை கூடிய யகாதிகளின் நற்பயனும், கை கூடவிருக்கும் நற்பயனும்,

ஒழுங்காகத் திரட்டிய பொருளும், ஊக்கத்தையும், திறமையும், ராஜ காரியம் முதலியவற்றைப் பராமரிக்கக் கூடிய திடச் சித்தமும் ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்குச் சித்திக்கின்றன.

இவ்வுலக இன்பமும், மேலுலக இன்பமும், பிரியமும், அதனால் ஏற்படும் ஆசையும், அவ்வாசையின் அனுபவமும், மனதிற்கினிய உற்றாரும், மங்களமும், உயர் நலமும், நல்ல வாசஸ்தானமும் புகழும், சௌபாக்யமும், செல்வமும், வழிகாட்டும் ஆசாரியனும், தந்தை போன்று தாங்குபவனும், உடைமையின் ரக்ஷணமும், தைரியமும், எல்லாருடைய அனுகூலமும், வெகுமானமும், வேத சாஸ்திர ஞானமும், போதனா சக்தியும், மக்களை ஏவுந்திறமையும் பணியாட்களை நடத்தும் திறமையும், மேழிச்செல்வமும், இடையூறுகளின் ஒழிவும், யாகங்களை் முதலிய நற்கருமமும், அதன் புண்ணிய பலன்களும், நீடித்த க்ஷயம் முதலிய நோயின்மையும், குறுகிய ஜ்வரம் முதலிய நோயின்மையும், நோயற்ற வாழ்வுக்கு உரிய மருந்தும், நீண்ட ஆயுளும், நல்ல சிநேகிதர்கள் கிடைத்தலும், பயமின்மையும், நன்னடக்கமும், நல்ல சயனமும், பகவத் ஸ்மரணையுடன் கூடிய விடியற்காலையும், யஞ்யம், தானம், அத்தியயணம் முதலிய பாவனமான காரியங்களுடன் கூடிய பகற் பொழுதும் ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்கு சித்திக்கின்றன அதாவது கிடைக்கின்றன.

அன்னமும் பிரிய வசனமும், பாலும், அதன் சாரமும் நெய்யும், தேனும், உற்றாறுடன் கலந்து உணவு அருந்துதலும், பயிர் தொழிலும், மழையும், வெற்றியளிக்கும் பூமியும், மரம், செடி, கொடிகளின் உற்பத்தியும், பொன்னும்,பொருளும், மணிகளும், செல்வத்தின் செழிப்பும், திடகாத்திரமும், சிறந்த தானிய வளர்ச்சியும், அதனால் ஏற்படும் மேன்மையும், அதன் பல வகை விசேஷங்களும், மேலும், மேலும் வளர்ச்சியும், பரிபூரணமும், பூர்ணத்திற்கு மேலான நிலையும், அழிவற்ற நிலையும், வரகும், அன்னமும், அன்னத்தால் பசி நீங்குதலும், நெல் வகைகளும், வால் கோதுமை வகைகளும், உளுந்து வகைகளும், எள் வகைகளும், பாசிப் பயிறுகளும், தட்டைப் பயிறுகளும், கோதுமைகளும், நரிப் பயறுகளும், தினைகளும் ஊசிச்சம்பா நெல்களும், செந்நெற்களும், ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்கு சித்திக்கின்றன அதாவது கிடைக்கின்றன.

கல்லும், மண்ணும் மணல்களும், மரங்களும், பொன்னும் எஃகும், ஈயமும், துத்த நாகமும் இரும்பும், தாமிரம் முதலிய இதர உலோகங்களும், நெருப்பும், ஜலமும், கொடிகளும், மூலிகைகளும், உழுது பயிரிட்டு விளந்ததும், உழுது பயரிடாமல் விளந்ததும் எனக்குச் சித்திக்கின்றன அதாவது கிடைக்கின்றன.

கிராமத்திலுள்ளவைகளும், காடுகளில் உள்ளவைகளுமான பிராணிகள், யாகங்களுக்கு உதவியாக இருக்கட்டும். கிடைத்த பொருளும், இனி கிடைக்கக் கூடிய பொருளும், புத்திரர்களின் செல்வமும், எனது செல்வமும், ஜங்கம சொத்தும், ஸ்தாவர சொத்தும், செயல் திறமையும், அதனால் ஏற்படும் நற்பயனும், அடையக் கூடிய சுகமும் எனக்கு சித்திக்கின்றன.

அக்னியும், இந்திரனும், ஸோமனும், ஸவிதாவும், ஸரஸ்வதியும், பூஷாவும், பிரஹஸ்பதியும், மித்திரனும், வருணனும், த்விஷ்டாவும், விஷ்ணுவும், அசுவினீ தேவர்களும், மருத்தேவர்களும், விச்வேதேவர்களும், பிருதிவியும், ஸ்வர்க்கமும், திசைகளும், மேல் திக்கும், பிரஜாபதியும் எனக்கு அனுக்கிரகிப் பவர்கள் ஆகின்றனர்கள்.

சோமக் கிரஹமும், சூரியக் கிரஹமும், சுக்ரக் கிரஹமும் அந்தர்யாம கிரஹமும், துருவக் கிரஹங்களும், ருதுக் கிரஹங்களும் எனக்கு எப்பொழுதும் நன்மையை அளிக்கின்றன.

ஸமித்தும், தர்ப்பையும், யாக மேடையும் யாக கரண்டிகளும் ஸோம பானப் பாத்திரங்களும், பவித்ரமான கலசங்களும், ஆதவனீய பாத்திரமும், ஹவிஸ்ஸுக்களை வைக்கும் மண்டபமும், ஸபா மண்டபங்களும், அரிசி நெய்யிலான ஹவிஸ்ஸும், பலி பீடங்களும், யாக முடிவில் செய்யும் புரோக்ஷணமும், ஸமித்துகளின் தகனமும், ஆகிய பிரசித்தமான யக்ஞத்தின் விசேஷ திரவியங்களும், அனுஷ்டானங்களும் எனக்கும் சித்திக்கின்றன.

அக்னியும், ஸோம யாகத்துக்கு முன் செய்யப்படும் ப்ரவர்க்கியமும், அர்க்க யாகமும், சூர்ய யாகமும், பிராணாஹுதியும் அசுவமேத யாகமும், பூமி தேவதையும், அதிதி தேவதையும், திதி தேவதையும், ஸ்வர்க்க தேவதையும், சக்வரீ என்னும் சந்தஸ்ஸுகளும் விராட் புருஷனின் அவயவங்களும், என்னிடம் யஞ்யத்தால் கல்பிக்கப்படட்டும்.

ருக் வேதமும், சாம வேதமும், சாம கான ஸதோத்திரமும், யஜுர் வேதமும், யஜமானனுடைய ஸமஸ்காரமாகிய தீக்ஷையும், பாவத்தைப் போக்கும் உபவாஸம் முதலியனவும், யாகத்திற்குரிய காலமும், பசுவின் பாலை மட்டும் பருகும் விரதம் முதலியனவும், பகலிலும், இரவிலும், பெய்யும் மழையால் பயிர்களின் செழிப்பும் யாகங்களால் என்னிடம் கல்பிக்கப்படட்டும்.

பசுக்களும், கன்றுகளும், ஒன்றறை வயதுக்காளைகளும், ஒன்றரை வயது கிடாரிகளும், இரண்டு வயது காளைகளும் இரண்டு வயது கிடாரிகளும், இரண்டரை வயது காளைகளும், இரண்டரை வயது கிடாரிகளும், மூன்று வயது காளைகளும், மூன்று வயது கிடாரிகளும், மூன்றரை வயது காளைகளும், மூன்றரை வயது கிடாரிகளும், நாலு வயது காளைகளும், நாலு வயது கிடாரிகளும், பொலிக்காளைகளும்,

கொட்டில் பசுக்களும், பெருங்காளைகளும் வந்திப் பசுக்களும், வண்டிக் காளைகளும், கன்று போட்ட பசுக்களும், இவற்றிக்கெல்லாம் நல்ல ஆயுளும், யாகத்தால் என்னிடம் கல்பிக்கப்படட்டும். பிராணன் கல்பிக்கப்படட்டும். அபானன் கல்பிக்கப்படட்டும். கண்ணின் திறமை கல்பிக்கப்படட்டும். காதின் திறமை கல்பிக்கப்படட்டும். மனதின் திறமை கல்பிக்கப்படட்டும். வாக்கின் திறமை கல்பிக்கப்படட்டும். சரீரத் திறமை கல்பிக்கப்படட்டும். இனி அனுஷ்டிக்கப் போகும் யாகங்களின் திறமையும், இந்த யாகத்தால் என்னிடம் கல்பிக்கப்படட்டும்.

பிரபஞ்சம் என்னும் பிரகிருதி எனக்கு வசமாகட்டும். முக்குணங்கள் எனக்கு சாதகமான பலன்களை தரட்டும். 5 பஞ்ச மகா பூதங்களும், 5 ஞானேந்திரியங்களும், மனமும், புத்தியும், 9 துவாரமுள்ள ஸதூல தேகமும், பத்துப் பிராணன்களும் அவற்றிக்கு ஆதாரமான ஸுஷும்னையும், 13 தேவதைகளும், 15 சங்கினீ முதலிய நாடிகளும், 17 லிங்க சரீர அவயங்களும், 19 விதமான ஸஞ்ஜீவினி முதலிய மூலிகைகளும், மர்ம ஸ்தானங்களும், மஹா ரோக தேவதைகளும், சுவர்க்கத்தில் உள்ளது போல தேகத்திலுள்ள அப்ஸரஸ்களும், 27 கந்தர்வர்களும், 29 வித்யுத்தேவர்களும், 31 புவனங்களும், 33 கோடி தேவர்களும், எனக்கு சாதகமாக அமையட்டும்.

4 புருஷார்த்தங்கள், 4 வேதங்கள், 4 உப வேதங்கள், அங்க சாஸ்திரம், சித்தி ரூபமான மகா வித்தைகள், 24 காய்த்ரி அக்ஷரங்கள், இவைகள் அனைத்தும் எனக்கு கல்பிக்கப்படட்டும்.

மேலும், அன்னமும், அதன் உற்பத்தியும், அதன் வளர்ச்சியும், யாகமும், என்னிடம் விளங்குகின்றன. அவற்றிற்கு எல்லாம் காரண பூதனான சூரியனும், உச்சியிலுள்ள வானமும், வானத்தின் அபிமான தேவதையும், பிரளய கால அபிமான தேவதையும், உலக அபிமான தேவதையும், உலகமும், அனைத்திற்கும் அதிபதியுமான பரமாத்மாவும், என்னிடம் அருள் கொண்டு விளங்கக் காண்கிறேன்.

| | |
|---|---|
| காமதேனு | - தேவர்களை அழைப்பவள் |
| மனு | - யஞ்ஞப் பிரவர்த்தகர், |
| பிரஹஸ்பதி | - மகிழ்ச்சியைப் பொங்குவிக்கும் சாஸ்திர மந்திரங்களை ஜபிக்கிரவர் |
| விச்வேதேவர்கள் | - ஸுக்தங்களைச் சொல்லுபவர்கள் |

பூமித்தாயே, காமதேனு, மனு, பிரஹஸ்பதி, விஸ்வே தேவர்கள் ஆகியவர்களுடைய அருளால் குற்றம் நீங்கிய என்னை துன்புறச் செய்ய வேண்டாம். இனிமையானதையே மனதால் நான் எண்ணுவேன் இனிமையானதையே செய்வேன் இனிமையானதையே தேவர்களின் ஆராதனைக்காக எடுத்துச் செல்வேன்.

தேனைப் போல், இனியதையே தேவர்களிடத்தும், நல்லதை கேட்க விரும்பும், மனிதர்களிடத்தும் பேசுவேன். அப்படிப்பட்ட என்னை சொற் குற்றம் வராமல், சோபிக்கும் வண்ணம் தேவர்கள் எங்களை காப்பாற்றட்டும். பித்ருக்களும், ஆமோதிக்கட்டும். அனைவருக்கும் சாந்தி நிலவட்டும்.

## பிற் சேர்க்கை "மூன்று"

*ஸ்நாந மஹா சங்கல்ப மந்த்ரத்தின் அர்த்தங்கள் :-*

*எனக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்ட பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள், பிதுர் சாபங்கள் நிவர்த்திக்காகவும், சரீர சுத்திக்காகவும் இந்த ஸ்நாநத்தை செய்து கொள்கிறேன்.*

*என்னுடைய முதல் ஜென்மாவிலிருந்து இதற்கு முந்தைய ஜென்மா வரையிலும், இந்த ஜென்மத்தில், நான் பிறந்ததிலிருந்து இன்று வரையிலும். மேலும் என்னுடைய சிறிய வயதிலும், யௌவன வயதிலும், மத்திம வயதிலும், முதுமையான வயதிலும், நான் ஜாக்கிரதையாக இருந்த சமயத்திலோ, ஸ்வப்பனத்திலோ, அஜாக்கிரதையாக இருந்த சமயத்திலோ, மனதாலேயோ, வாக்காலேயோ, கர்மேந்திரியங்களாலோ, காரணத்துடனோ, காரணமில்லாமலோ, ரகஸ்யமாகவோ, பிரகாசமாகவோ, ஞானத்துடனோ, அஞ்ஞானத்துடனோ, ஏதாவது பலன் கருதியோ, பலன் கருதாமலோ, செய்த அனைத்து பாதகங்களும், மகா பாதகங்களும், உப பாதகங்களான பாதகங்களுக்கு துணை போனதாலோ, காரணமானதாலோ, எந்த ரூபத்திலும் உப பாதகத்திற்கு உடந்தையாய் இருந்ததாலோ, ஏற்பட்ட தோஷங்கள் எல்லாம் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும். மேலும் ஜாதிப்பிரஷ்டம் செய்யும் அளவுக்கு நான் தவறுகள் செய்திருந்தாலும், எனக்கோ, மற்றவர்களுக்கோ கௌரவம் குறையும்படி நடந்து கொண்டதினாலோ, இதனால் எனக்கு ஏற்பட்ட பாதகங்களிலிருந்தும், நான் ஞானத்துடனோ, அஞ்ஞானத்துடனோ சில காலங்கள் மட்டும் பாபங்கள் செய்திருந்தாலோ, இவையனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.*

*மேலும் கோ வதை செய்திருந்தாலோ, குருவுக்கு துரோகம் செய்திருந்தாலோ, தங்கத்தை திருடி இருந்தாலோ, சுரா பானாதிகள் அருந்தியிருந்தாலோ, ராஜபத்னி, குருபத்னி, த்வஜபத்னி, (நண்பர்கள் மனைவி), வேசி இவர்களை தொட்டதாலோ, நண்பர்களிடமிருந்து பணத்தையோ, பொருளையோ, திருடினதாலோ, கண்ட இடத்தில் சாப்பிட்டதாலோ, கெட்டுப்போன பொருட்களை சாப்பிட்டதாலோ, மனைவியை கைவிட்டதாலோ, மாதா, பிதாவுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல் விட்டதாலோ, பிராமணர்களுக்கும், ஆச்சாரியர்களுக்கும், துரோகம் செய்ததாலோ, நமக்கு சம்பந்தமில்லாத பெண்களை தொட்டதாலோ, ரஜஸ்வலா ஸ்திரிகளை தொட்டதாலோ ஏற்பட்ட பாபங்கள் அனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.*

*மேலும், குல தெய்வத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, இஷ்ட தெய்வத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, கிராம தேவதைகளால் ஏற்பட்ட சாபத்தாலோ, உபாஸனா தெய்வத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, ரிஷிகள் சாபத்தாலோ, சித்தர்கள் சாபத்தாலோ, பிராமண சாபத்தாலோ, ராஜகுல சாபத்தாலோ, பித்ருக்கள் சாபத்தாலோ, மஹான்கள் சாபத்தாலோ, நவக்கிரஹங்களின் சாபத்தாலோ, ஸர்ப சாபத்தாலோ, மாத்ரு சாபம், பித்ரு சாபம், களத்ர சாபம், சகோதர சாபம், சகோதரி சாபம், புத்திர சாபம், புத்திரி சாபம், பௌத்திர, பௌத்திரி சாபம், ஜேஷ்டாதிகள் சாபம், கனிஷ்டாதிகள் சாபம், கர்ப்பிணி சாபம், விதவைகள் சாபம், வேசி சாபம், ஆகியவர்களின் சாபத்தாலோ, அனைத்து மிருகங்களினால் ஏற்பட்ட சாபத்தினாலோ, அனைத்து பட்சிகளால் ஏற்பட்ட சாபத்தினாலோ, பஞ்ச பூதங்களால் ஏற்பட்ட சாபத்தாலோ, நவரத்தினங்களால் ஏற்பட்ட சாபத்தாலோ, தீபத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, பூர்வ ஜென்மத்தில் ஏற்பட்ட பாபங்களினாலோ, மற்றையோருடைய பொருட்களை திருடிய பாபத்தாலோ, பார்க்கத் தகாததைப் பார்த்ததாலோ, பண்டிதர்களையும், குருவையும் ஏக வசனத்தில் அழைத்ததால் ஏற்பட்ட*

பாபங்களினாலோ, நீர் நிலைகளுக்கும், காடுகளுக்கும், மரங்களுக்கும், செடி, கொடிகளுக்கும், தான்யாதிகளுக்கும், மூலிகைகளுக்கும், மருந்துகளுக்கும், என்னால் செய்யப்பட்ட பாபங்கள் அனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.

நான் தெரிந்தோ, தெரியாமலோ செய்த அனைத்து பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள், பிதுர்சாபங்கள் அனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.

- சுபம் -

அன்புடையீர்.

உக்ர ரத சாந்தி, சஷ்டியப்த பூர்த்தி சாந்தி (அறுபதாம் கல்யாணம்) பீமரத சாந்தி, விஜய ரத சாந்தி மற்றும் சதாபிஷேகம் ஆகிய சாந்தி பிரயோகங்கள் ஆயுள் விருத்திக்காகவும், ஆரோக்கிய விருத்திக்காகவும், மேலும், குல விருத்தி, குடும்ப விருத்தி, வம்ச விருத்த, புத்திர விருத்தி, கோத்ர விருத்தி என்று சொல்லப்படும் அனைத்து விருத்திகளுக்காவும் செய்து கொள்ளப்படும் பிரயோகங்களாகும்.

இந்த அனைத்து பிரயோகங்களைப்பற்றியும் அதனுடைய பந்ததிகளைப்பற்றியும், இந்த பிரயோகங்களால் நம் ஒவ்வொருவருக்கும் என்னென்ன நல்ல பலன்கள் கிடைக்கின்றன என்பதனைப்பற்றியும்,இந்தப் புத்தகத்தில் மிகவும் விளக்கமாக கொடுத்துள்ளோம்.இவைகளை ஒருமுறைக்கு இருமுறை படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது.

இந்த பந்ததிப்படி, இந்த சாந்தி பிரயோகங்கள் அனைவருக்கும், ஒரு சேர, ஒரே இடத்தில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், சமஷ்டியாக 23.09.2012 ஞாயிற்றுக்கிழமை, அன்று சென்னை 44.குரோம்பேட்டை ராதா நகர் மெயின் ரோடு எண் 3.இந்திரகாந்தி குறுக்குத்தெருவில் உள்ள ஸ்ரீ காமாஷி கம்யுணிட்டி ஹால் (ஸ்ரீ காமாட்சி கல்யாண மண்டபம்) என்ற இடத்தில் நம்முடைய ஸ்ரீ மகாலஷ்மி யோக பீட சார்பாக நடத்த உள்ளோம்.

59 வயதிற்கு மேற்பட்ட அனைவரும், அவரவர்களுடைய,ஆயுள், ஆரோக்கிய விருத்திக்காகவும் சந்தோஷமும், நிம்மதியும் அந்தந்த வயதில் கிடைக்க வேண்டிய சௌகரியங்களும், அரவணைப்புகளும், மனதிருப்தியும் கிடைக்க இந்த வைபவத்தில் கலந்து கொள்வது மிகவும் நல்லது.

மேலும், திருமணமான அனைத்து தம்பதிகளும் (அனைத்து வயதினரும்) தங்களுடைய குலவிருத்தி, கோத்ர விருத்தி,வம்ச விருத்தி, புத்ர விருத்தி, குடும்ப விருத்தி ஆகிய விருத்திகளுக்கும், குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படவும், முக்கியமாக கணவன் மனைவி இடையே அதாவது தம்பதிகளிடம் அன்யோன்யம் அதாவது ஒற்றுமை ஏற்படவும் (ஜயாதி ஹோம பலன்களை பார்க்கவும்) வாழ்க்கையில் எல்லா விதமான சௌகரியங்களும், மன நிம்மதியும், சந்தோஷத்துடன் கூடிய முன்னேற்றமும் பெற இந்த வைபவத்தில் கலந்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம்.

அனைத்து சந்தேகங்களுக்கும் விரிவான விளக்கங்கள் **அமிர்தம்** என்ற இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன. மேலும் விபரங்கள் தேவைப்பட்டால் குருஜியை தொடர்பு கொள்ளலாம்.